சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VII, தொகுதி எ, | APRIL & MAY 1912 ஏப்ரல், மேமீ 1912. | NO. 9-10. பகுதி கூ-ய.

கருணை.

ஒவ்வொருவரும் தாம் துன்புற்ற காலத்தில் தம்மைத் துன்பத்தினின்று நீக்கவேண்டுமென்று பிறர் உதவியை விரும்புவ தியல்பாமென்பது யாவரும் அறிந்த விஷயமாம். நாம் உறங்குங்காலமொழிய மற்றக்காலங்களில் மனத்தாலோ வாக்காலோ காயத்தாலோ யாதாவதொன்றை நினைப்பது அல்லது பேசுவது அல்லது செய்வதாக விருக்கின்றோமே யன்றிச் சும்மாவிருப்பதில்லை. நாம் அவ்வாறிருத்தற்குக் காரணம் துன்பத்தினின்றும் நீங்குவதற்கேயாம். நாம் துன்பத்தினின்றும் நீங்குவதற்காகச் செய்யும் முயற்சி யின்பத்திற்குங் காரணமாக விருக்கின்றது. அஃது அழுக்கையொழித்தற்பொருட்டு வஸ்திரத்தோடு சேர்க்கும் உவர்மண்முதலியன அதனது வெண்மை வெளிப்படுதற்குங் காரணமா யிருத்தல் போல்வதாம். நம்முடைய துன்பத்தை நீக்கிக்கொள்ளுதற்பொருட்டு நாம் பிறருடைய வுதவியை விரும்புவதுபோலப் பிறரும் தம்முடைய துக்கத்தை நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு நம்முடைய வுதவியை விரும்புவாரன்றோ? நாம் பிறரது துன்பத்தை நீக்க முயன்றாலன்றோ நம்முடைய துன்பத்தை நீக்கப் பிறர் முயலுவர்? நாம் பிறருடைய துன்பத்தை நீக்க முயலாது நம்முடைய துன்பத்தைப் பிறர் நீக்கவேண்டுமென்று முயலுவது தகுதியுடையதாமோ? பிறருடைய வுதவியின்றி வாழ்நாளைக்கழிப்பது எத்தன்மையோர்க்குமுடியாத விஷயமாமாதலின், ஒருவர்க் கொருவர் அத்தியாவசியகமாகஉதவிசெய்தற் குரியவராதல் வேண்டும். துன்பமுண்டாயபோது பிறருடைய வுதவியை நாம் விரும்புவதுபோலப் பிறரும் துன்பமுண்டாய காலத்து நம்முடைய வுதவியை விரும்புவா ரென்பதை யறிந்து பிறர்க்குத் துன்பம் நேரிட்டபோது விரைந்து அவரது துன்பத்தை நீக்குபவரன்றோ மக்களுள் உத்தம புருடராவர்? "எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணியிரங்கவுநின், தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே" என்று ஸ்ரீதாயுமானப் பெருந்தகையார் திருவாய்மலர்ந்திருக்கின்றவாறு உயிரனைத்தையும் தன்னுயிராக வெண்ணி, அவற்றிற்குத் தீமைபுரியா தொழுகுதலொவ்வொருவனுக்கு மத்தியாவசியகமான கடமையாம். இதுவே கருணையாம். தனக்குத் தானேயொருவன் தீமைசெய்து கொள்ளுவது யாங்ஙனுமின்றாம். தற்கொலைசெய்து கொள்வதென்பது தன்னைக் கொல்லுவதன்

ரும்; ஆனால், தன்னுடம்பின்மீதுள்ள வெறுப்பால் அதனைவிட்டு நீங்குத லாம். உயிரனைத்தையும் தானாகக் காண்பவன் ஒருயிர்க்குந் தீமைசெய் வதே யின்றாம். கருணையுடையவன் தான் பிறர்க்குச்செய்யுந் தீமையைத் தனக்குச் செய்வதாக வறிதலின், அவன் ஒருயிர்க்குந் தீமை செய்வதொரு போதுமின்றாம். ஒருயிர்க்குந் தீமை செய்யாது, அனைத்துயிரையும் தானா கக்காண்பவனன்றோ உத்தமர்க்குள் உத்தமனாவன். பிறவுயிர்க்குவந்த துன் பத்தைத் தனக்குவந்த துன்பமாக வெண்ணி, அத்துன்பத்தை நீக்க முயலுகின்றவன்றான் கருணையுடையானாதல்கூடும். "எல்லா வுயிரு மொன் றாகப் பார்ப்ப தியோக மெனவுரைத்தாய்" என்று அருச்சுனன் கண்ண பிரானைநோக்கிக் கூறியதைநோக்குமிடத்து 'எவ்வுயிருமென்னுயிர்போ லெண்ணி' ஒழுகுதலாகிய கருணையும் ஒருவகையோகமாமென்றறியப்படு தலின், கருணையுடையவராக நாம் முயலுதல் வேண்டும். சித்திமுத்திக ளுண்டாவதற்குக் காரணமாயுள்ள யோகம் கருணையுடையவனுக்கு எளிதிற் சித்திப்பதாக விருத்தலின், நாம் ஒருயிர்க்குந் தீமைபுரியாது அதற்கு நேர்ந் துள்ள துன்பத்தைக் கூடுமானவரையில் நீக்க முயலுதல்வேண்டும். அவ் வாறுமுயன்றொழுகுவோமாயின், நம்மிடத் தொருபயனையுங் கருதாது, அறி வுள்ள தந்தை தன்மைந்தரைக் காப்பதுபோன்று நம்மைக் காத்துவரும் பெருங்கருணா நிதியாகிய கடவுளது கருணைக்கு நாம் பாத்திர ராவோம்.

தமக்குநேர்ந்துள்ள துன்பத்தை நீக்க முயலாது பிறர்க்கு நேர்ந் துள்ள துன்பத்தைப் பயன்கருதாது மனமிரங்கி நீக்கமுயலுகின்றவர்தாம் கருணைப் பெருஞ்செல்வமுடையவராவர். கருணைப்பண்பினை (அருட்குணத் தை)ப் பெறுவது எளிதன்று; அது பெரும் புண்ணியத்தின் பயனாம். "தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல், மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல், இன்னுயிர்க் கிறைவனா யின்ப மூர்த்தியாய்ப், பொன்னுயி ராய்ப் பிறந் துய்ந்து போகுமே" என்று சீவகசிந்தாமணி முத்தியிலம்பகத்தில் கூறுவதை நோக்குமிடத்துத் 'தன்னுயிர் தான்பரிந் தோம்புமாறுபோல், மன் னுயிர் வைகலும் ஓம்பி' வாழுதலாகிய கருணை யுயிர்க்குற்ற துணையாயிருந் துதவுமென்பது பெறப்படுதலின், "தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா வுயிர்கள் மேலுஞ் செல்வதாகிய கருணை" யை மேற்கொண்டொழுகுதல் நமக்கின்றியமையாத கடமையாம். இக்கருணை யென்னும் அருள் அன்பில் லாதார்க் குண்டாகாதாகலின், அன்புடையாரே அருளுடையராதற் குரியவ ராவர். அன்பாவது மனைவி மக்கள் முதலாயினோரிடத்துள்ள காதலாம். மனைவிமுதலாயினோ ரிடத்து அன்பில்லாதவர்க்கு 'எவ்வுயிரு மென்னுயிர் போ லெண்ணி' இரங்குதலாகிய கருணையுண்டாவ தெவ்வாறாம்? தன்னு டைய மனைவி, புத்திரர், மித்திரர் முதலாயினோரிடத்து அன்பில்லாதவர் மற்றவர் படுந்துன்பத்திற்கிரங்கி, அவர்க்குதவிசெய்ய முற்படுதல் கூடுமோ? மனைவிமுதலாயினோரிடத்து அன்பின்றியிருப்பவன் எவ்வாற்றால் கருணைப் பண்பினைப்பெற்று வாழ்வான்? முன்னர்ச் சம்பந்தமுடைய மனைவி முத லாயினோரிடத்து அன்பினை நிரம்பச்செலுத்தி; அதுகாரணமாகச் சம்பந்த

மில்லாத எல்லாவுயிரையும் தன்னுயிர்போலெண்ணி, அவற்றிற் கிடர்வந்தகாலத்துத் தீயிடைவைத்த வெண்ணெய்போ லுருகி, அதனை நீக்கமுயல்பவனன்றோ கருணைப்பண் புடையவனாவன்? பிறர்துன்புறுவதைக்கண்டின்புற் றிருப்பவன் உண்மையில் மனிதனால்கூடுமோ? சிலர் கருணைப்பண்பென்ப தொருசிறிதுமின்றித் தும்பிமுதலியவற்றைப்பிடித்து, அவற்றின் சிறகுமுதலியவற்றை யொடித்து விட்டு, அவை துள்ளிப்பதைப்பதைக் கண்டு களிப்புறுகின்றனர். இவர் மனவுணர்வுடையாராவரோ? ''அல்லலருளார்வார்க் கில்லை (அருளுடையார்க்கு இம்மையிலும் ஒரு துன்பமுண்டாகாது)'' என்று திருவள்ளுவநாயனார் கூறியதை நோக்குமிடத்து அருளுடையார்க்கு எப்போதும் துன்பமுண்டாவதில்லையென்பது விளங்குதலின், நல்வாழ்வையடைய விரும்புகின்றவர்களத்தியாவசியகமாகக்கருணைப் பண்பினைப் பெறமுயலுதல் வேண்டும். ஜடபரதர் நடக்கும்போது ஒரு பிராணிக்குந் தீமையுண்டாதல் கூடாதென்று கருதி நுகத்தடியளவுதூரம் பூமியிற் பார்வையைச்செலுத்தி யொழுகிவந்தாரென்பதையும், சிபிச்சக்ரவர்த்திபுறாவொன்றன் பொருட்டாகத் தம்முடைய வுடம்பை யறுத்துக்கொடுத்தாரென்பதையும், தருமபுத்திரர் சுவர்க்கஞ் சென்றபோது தம்மைவிடாது தொடர்ந்துவந்த நாயைப்பாதுகாத்தாரென்பதையும் நோக்குமிடத்து, கருணைப்பண்பு உயிர்க்குற்றதுணையாயிருப்பதென்பது நன்கு விளங்குவதாம்.

''பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்-அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக் குய்த்து'' என்று சிறுபஞ்சமூலங் கூறுவதிங்கு நன்குணர்தற் பாலதாம்.

பிறர்மனை வியர்தமைப் பெற்றதா யெனவெண்.
பொதுமகள் நேசம் பொல்லாங் கெலாந்தரும்.
உள்ளுணர் வுடையோ ருத்தம ராவார்
வாக்கு வெண்கலம் மௌனம் பொன்கலம்.
அநித்திய சுகத்தி லாசைவை யாதே.
காமனை வென்றோர் கடவுளைக் காண்பார்.
மநநா சத்தால் வாய்க்கும் பரகதி.
உண்மையே பேசி உத்தம னாயிரு.
இதமொழி யுரைத்த லென்றும் நன்று.
சாதுசங் கத்தால் சற்குண முண்டாம்.
ஞானியின் சேவையால் நன்னிலை வாய்க்கும்.
சாந்த நிலைவரின் தன்னிலை தோன்றும்.
பற்றற் றோர்க்குப் பரகதி வாய்க்கும்.

சூடாலை.

(177-வது பக்கத் தொடர்ச்சி).

முதலங்கம்.

இரண்டாங் காட்சி.

இடம்—மாளவதேசத்து நந்தவனம்.

பாத்திரங்கள்-நாகன்-தேவன்-சிகித்துவஜன்-பத்திரசேனன்-விகடகவி.

காலம்-மாலை.

நந்தவனத்து வாயிற்காவலர் அரசன் வருகையைப் பற்றிப் பேசிக்கொள்ளுகின்றனர்.

நாகன்:—தேவா! நமதுமகாராஜா வருஞ் சமயமாயிற்று; விழிப்பாயிரு.

தேவன்:—நாகா! நான் தூங்கிவிழுகின்றேனென்று நினைக்கின்றாய்.

நாகன்:—உன்கண்ணே அதைத் தெரிவிக்கும்.

தேவன்:—அப்படிச் சொல்லாதே! என்னைத் தூங்கு மூஞ்சியென்று நினைக்கின்றாய்?

நாகன்:—இன்றையதினம் நீ ஒருவிதமாகத் தலைகவிழ்ந்திருப்பது பற்றி அப்படிச் சொன்னேன்; கோபித்துக்கொள்ளாதே.

தேவன்:—இராத்திரி வெகுநேரம் பித்த மிகுதியால் தூக்கம் வரவில்லை; அதனாற்றான் நான் ஒருவிதமாக இருக்கின்றேன்.

நாகன்:—அஃதிருக்கட்டும்; வண்டிச் சத்தம்கேட்கின்றது; அது யாருடைய வண்டியா யிருக்கலாம்?

தேவன்:—(உற்றுக்கேட்டு) அது நமது மகாராஜாவின் வண்டிதான்; அதிற் சந்தேகமே யில்லை.

சிகித்துவஜன் ஏறிவந்த வண்டி நந்தவனத்தினருகே வருகிறது.

நாகன்:—தேவா! மகாராஜா தனித்து முகம்வாடி வருகிறார் பார்.

தேவன்:—ஆமாம்; மகாராஜாவின் முகம் வாடுவதற்குக் காரணமென்ன? ஒருநாளும் அவர்முகம், இப்படி வாடியதில்லையே!

நாகன்:—நாமேன் அதுபற்றிப் பேசவேண்டும்? கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்?

வண்டி நந்தவனத்தின்
வாயிலருகே வந்து விட்டது.

சிகித்துவஜன்:—(வணக்கத்தோடு நிற்கின்ற வாயிற் காவலருள் தேவனை நோக்கி) அடா தேவா! நந்தவனத்துப் பளிங்கு மண்டபத்துக் காவலனாகிய பத்திரசேனன் வந்திருக்கின்றானா?

தேவன்:—மன்னர்மன்ன! வந்திருக்கின்றான்.

சிகித்துவஜன் நந்தவனத்துள் பிரவேசிக்கின்றான்.

சிகி:-(தனக்குள்) சூடாலை நம்முடன் வந்திருந்தால் என்ன சுகமாக விருக்கும். அவளைவிட்டு நாம் தனித்து வந்ததே பெருந்தவறாகும். இங்கவள் நம்முடன் வரும்போதெல்லாம் இது தவஞ்செய்தற்குத் தகுதியான இடமாமென்று சொல்லுவாளே! நாம் அதைக்கவனியாதே போனோம். இன்றைய தினம் அவள் நாம்ஞானமாகிய புத்திரனைப் பெறவேண்டும் என்று கூறியதன் காரணத்தை நன்குவிசாரித்தறியவேண்டும். (வெளிப்படையாய்) பளிங்குமண்டபத்தில் வண்டியினின்றிறங்கி) அடா! பத்திரசேனா!

பத்திரசேனன்:—ராஜபூபதி! நமஸ்காரம்.

சிகி:—நான் நந்தவனத்தைச் சுற்றிப்பார்க்கப்போவதில்லை; இங்கிரவு 8-மணி பரியந்த மிருப்பேன்.

பத்:—மகாராஜா! சமஸ்தானத்து விகடகவி தங்களைத் தரிசிக்க வந்திருக்கின்றான்.

சிகி:—கூப்பிடு! கூப்பிடு!

(பத்திரசேனன் போகிறான்).

பத்திரசேனன் விகடகவியுடன் பிரவேசிக்கின்றான்.

விகடகவி:—(அருகேவந்து) மன்னரேறே! வந்தனம், வந்தனம், தந்தனம், தந்தனம்.

சிகி:—அம்பலத்தாடி! யாதாவது விசேஷமுண்டோ?

விக:—என்ன விசேஷம்! காமன்மகன் காண்டீபன் என்றுசொல்வதுதான் இப்போது விசேஷம்.

சிகி:—காமனுக்கு மகனேது? காண்டீபன் தந்தை இந்திரனன்றோ?

விக:—உண்மையே!

சிகி:—உளறுகின்றாய்.

விக:—உளறவில்லை: உள்ளதே கூறினேன்.

சிகி:—எப்படி!

விக:—கா-கற்பகச் சோலைக்கு, மன்-அரசன் (இந்திரன்) என்று பொருள்கொண்டால், நான்கூறியது சரியென்று தோன்றும். காமனுக்கு விடயாநந்தனென்றொரு புத்திரனிருக்கிறானென்பது தங்களுக்குத் தெரியாததோ?

சிகி:—அஃதிருக்கட்டும்; வேறு விசேஷமிருந்தாற் சொல்.

விக:—வேறு விசேஷம் இராமன் தமையன் இரவியென்று சொல்வது தான்.

சிகி:—(புன்முறுவலுடன்) பத்திரசேனா! ஏதேதோ பேசும் அம்பலத் தாடியோடு நீயே சிறிது பேசு.

பத்:—அம்பலத்தாடி! இராமனுக்குத் தமையனுண்டென் றெங்கே படித்தாய்?

விக:—படிக்கவேண்டுமோ? இரா-இராவிற்கு, மன்-அரசன் (சந்திரன்) என்று பொருள் கொண்டால், அவனுக்கு இரவி (சூரியன்) தமையனாக மாட்டானோ?

பத்:—மிக நன்றாக விருக்கின்றது? மகாராஜா உன் முகத்தை நோக்குகின்றார் பார்?

விக:—பார் மகள் தலைவ! தங்களது பங்கயவதனம் தமியேனைப் பார்ப்பதற் கேது வென்னோ?

சிகி:—இன்று உன்னுடைய விகடம் என்மனத்தைவிகசிக்கச் செய்யவில்லை. வேறு நல்ல விகடமிருந்தால் செய்; பார்ப்போம்.

விக:—(தனக்குள்) இன்று நல்ல விகடங்கள் செய்து பேர்பெற வேண்டும் (வெளிப்படையாய்) வேந்தர் வேந்தே! நான்கு பூ கண்டு பிடித் திருக்கின்றேன்.

சிகி:—நான்கு பூ எவை?

விக:—உப்பு, புளிப்பு, தித்திப்பு, கைப்பு என்பனவே.

சிகி:—நல்ல பூ நீ சொன்ன பூ. பூ இல்லையே,

விக:—பூ இல்லையோ? † குறுக்கும் வழிக் குறுக்கலால் பூ பு-என்யிற்று.

சிகி:—அப்படி வருவது செய்யுளி லன்றோ?

விக:—உப்பு முதலியன செய்யுளல்லவோ? செய்வதன்றோ செய்யுள்? உப்பு முதலியன செய்யாதனவோ?

சிகி:—(சிறிது புன்முறுவல் செய்து) நீ தொல்காப்பியங் கூடப் படித்திருக்கின்றாய் போலும்!

விக:—அதற்கென்ன சந்தேகம்? தொல் காப்பிய (பழைமையானகாவிய)ங்களோ டன்றோ தொல் காப்பியத்தைச் சோலையப்ப உபாத்தியாயரிடத்தில் வாசித்தேன். அது தங்களுக்குத் தெரியாததன்றே. இன்னொரு விஷயத்தைப் புதுவதாக அறிந்திருக்கின்றேன்? ஆனா லது மிகுரகசியமானது.

சிகி:—அவ்வளவு ரகசியமானதா?

விக:—ஆம்! சொன்னால் தலைபோய் விடும்?

சிகி:—நானன்றோ தலைவாங்க உத்தரவுதரவேண்டும்;பயப்படாமற் சொல்.

விக:—சொல்லட்டுமா?

சிகி:—சொல்லலாம்; பயப்படாதே.

விக:—குமாரவேள் (சுப்பிரமணியர்) தந்தை குதிரைக்காரன் மகனென்று சிலர் மிகுரகசியமாகப் பேசுகின்றனர்.

சிகி:—இது மிகப்பெரிய ரகசியமோ? மணிவாசகப் பிரபுவின் துன்பத்தை நீக்குதற் பொருட்டுக் குதிரை விற்கவந்த சொக்கநாதரை யன்றோ நீ குதிரைக்கார னென்கிறாய்.

விக:—ஆமாம்.

சிகி:—போதும்போதும்! உனது பிரசங்கம்.

விக:—இன்னொரு பெரும் விஷயமிருக்கின்றது; அதைச்சொல்லி எனது பிரசங்கத்தை நிறுத்தி விடுகிறேன்.

சி:—முன்சொன்னது போலிருக்குமோ?

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல்-7.

விக:—அப்படியிராது; தாங்கள் மிகவுங் கவனிக்கத் தக்கதாக விருக்கும்.

சிகி:—அப்படியானால், சீக்கிரஞ் சொல் (கடிகாரத்தைப் பார்த்து) மணி $7\frac{1}{2}$-ஆகின்றது.

விக:—உள்ளதன் தலைமேலே இல்லாமை இருக்கும்; அறத்தின் சிரத்திலே மறமிருக்கும்; இன்பத்தின் முடியிலே துன்பமிருக்கும் என்று தங்களந்தப்புரத்தில் வழங்கிவருவதே பெரும் விசேஷமாம்.

சிகி:—அப்படியா சமாச்சாரம்? நான் ஒருநாளு மப்படிக் கேட்டதில்லையே!

விக:—தாங்கள் எப்படிக் கேட்க முடியும்.

சிகி:—முடியாதோ.

விக:—முடியாது; முடியாது.

சிகி:—எனப்படிச் சொல்லுகிறாய்.

விக:—வெகுரகசியமாக வழங்கிவருவதுபற்றி அப்படிச் சொல்லுகிறேன்.

சிகி:—(தனக்குள்) என்ன ஆச்சரியம்! இவனுக்குத் தெரிந்த அந்தப்புரத்துச் சமாச்சாரம் நமக்குத் தெரியாமற் போய்விட்டதே (வெளிப்படையாய்) அம்பலத்தாடி! உனக்கெப்படி தெரிந்தது?

விகட:—மகாராணியார் எனது சகோதரியல்லவா? நான் அந்தப்புரத்திற்குப்போகும்போ தெல்லாம், அவர்கள் சிவப்பிரகாச சுவாமிகள் எங்கே யிருக்கிறார்? சின்மயாநந்தர் எப்படியிருக்கின்றார் என்று கேட்பார். நானே தாவதொன்று விகடமாய்ச் சொல்வேன்! ஒருநாள் மகாராணியார், அம்பலத்தாடி! நீ விகடம்பேசி விணுப்போகின்றாயே! விகடம் பேசுகின்றவன்யார்? அவன் உடம்பா? உயிரா? என்று பார்த்தாயா? என்று கேட்டார். எனக்கது தொட்டு நான்யார்? என்பது பற்றி விசாரிக்கவேண்டுமென்னும் எண்ணம் மூண்டாயிருக்கின்றது. சாமிவேஷம் தரித்தவரை யெல்லாம் நான்யார்? என்பதுபற்றிக் கேட்கத்தொடங்கினேன்; ஒருவரும் எனக்குத்தக்கபடி விடைசொல்ல வில்லை. அதனாற்றான் நான் முன்

போல விகடஞ்செய்யா திருக்கின்றேன்; இல்லாவிட்டால் வயிறுகிழியச் சிரிக்கும்படி யன்றோ விகடஞ் செய்வேன். அதனாற்றான் என்முகம் தங்கள் முகம்போன்று வாடியிருக்கின்றது. அதைச் சிறிதுகவனித்துப் பாருங்கள்.

சிகி:—என்முகம் வாடியா விருக்கின்றது ?

விக:—அதுபற்றிச் சொல்லுவானேன்? வேண்டுமானால், கண்ணாடி யெடுத்துப்பாருங்கள். தங்கள் முகம்வாடி யிருப்பதற்குக் காரணமென்ன? இன்றென்னுடைய விகடம் தங்கள் மனத்தைக்களிப்பிக்கவில்லை. தங்கள் மனத்திலேயேதோவொரு பெருஞ்சிந்தனை யிருக்கின்றதென்று தெரிகின்றது.

சிகி:—"நான்யார்" என்பதையா அறியப்போகின்றாய்? உனக்குக் கூடச் சிறிது வேதாந்தப்பயித்தியம் பிடித்திருக்கின்றதுபோலும்! அஃதிருக்கட்டும், முன்சொன்ன விஷயத்தை யெப்படி யறிந்தாய்?

விக:—"உள்ளத்தின் முடிமேலே யில்லாமை வீற்றிருக்கு முலகி லென்றும், தெள்ளூற்ற நல்லறத்தின் சிரத்திலே யெப்பொழுதுந் தீமை வாழும், எள்ளற்ற வின்பத்தின் தலைமேலே துன்பங்க ளிருக்கு மென்றால், கொள்ளத்தக் கனவாகுங் குற்றமிலாப் பொருளேது குறிப்புளேற்கே" என்னும் பாடலைப் பத்மாவதி பாடஞ்செய்வதைக்கண்டு, பத்மாவதி! முணமுணவென்று சொல்வதென்னவென்று கேட்டேன்.

சிகி:—பத்மாவதியா? என்ன ஆச்சரியம்!

விக:—ஆம். அதற்குப் பத்மாவதி யொன்றும் கூறாது மகாராணியாரிடஞ் சென்று, யான் கேட்டதைக் கூறினாள். அதற்கு மகாராணியார் அவனுக்கென்னவேலை; உன்வேலையைப்பார் என்று கூறினார். அதனாற்றான் அப்படிச் சொன்னேன்.

சிகி:—அதுபற்றி விசாரிக்கலாம். மணியோ எட்டாயிற்று. அரண்மனைக்குப் போவோம். (போகிறார்கள்).

ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரச் சுருக்கம்.

(183-வது பக்கத் தொடர்ச்சி)

ஒரு சித்தபுருஷருக்கு இவ் வற்புதங்கள் மிகு சுலபமாம். சதாசிவப் பிரஹ்மேந்திரரோ பரமசித்தமூர்த்தி, அவர்மனம் எப்போதும் ஆத்மாகாரமாகவே யிருக்கும். அவர் உலக விஷயத்திற் சிறிதேனுமிச்சையில்லாதவர். அவர் தமது சரீரத்தில் மண்ணும் சாம்பலுமே பூசிக்கொண்டு, இவ்வுலகம் தாம் பூசிக்கொண்டிருக்கும் மண்ணிலும்சாம்பலினுந் துச்சமானதென்னு மெண்ணமுடையவர். அவரடைந்த சொரூபஸ்திதியை நோக்கி அவரதுகுரு அவரைத் துதிசெய்திருக்கின்றனர். அவர்கருத்து எப்போதும் பிரபஞ்சாதீதமாய் ஆநந்தமாகவே யிருக்கும். அவருக்கு உணவு முதலியவற்றைப் பற்றிச் சிறிதுங் கவலையேகிடையாது. அவர் உலகத்தி லிருந்தபோதிலும் புளிபழமு மோடும்போலப் புரைதீர்ந்த நெஞ்சுடையவரா யிருந்தனர்.

இவர் 1738ம் வருஷத்தில் புதுக்கோட்டையைச்சார்ந்த திருவரங்குளத்திற்கடுத்த கானகத்தில் திரிந்துகொண் டிருக்குங்கால் புதுக்கோட்டை யரசரான விஜயரகுநாத தொண்டைமான் சக்ரவர்த்தி இவரைக் கண்டனர். தொண்டைமான் சக்ரவர்த்தியும் அதிக விரக்தி யுள்ளவராய்த் தமது காலத்தைப் பெரும் பான்மையும் அக்கானகத்தில் சமாதிபுரிவதாகக் கழித்துவந்தனர். இச்சக்ரவர்த்தி பிரஹ்மேந்திரரை எட்டுவருடகாலம் விடாது தொடர்ந்து வந்தனர், அதைப் பிரஹ்மேந்திரர் நோக்கிஅவர்மீது பிரீதியுற்று மணலில் சில உபதேசமொழிகளை யெழுதிக் காட்டி திரிசிரபுரத்தைச் சார்ந்த பிக்ஷாண்டார் கோயிலில் வசிக்கும் தமது சகபாடியாகிய கோபாலகிருஷ்ண சாஸ்திரியவர்களிடம் மேல் நடக்க வேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளுமாறுக் கியாபித்தனர். அவர் அங்ஙனமே, சாஸ்திரியாரைத் தமது சமஸ்தானத்திற்கு வரவழைத்து அவருக்கும் அவருடன் வந்த பிராமணர்களுக்கும் மானியங்கள் விட்டனர். அக்காலேற்பட்ட செப்புச் சாசனமின்னுமிருக்கின்றது. தசராபண்டிகையும், தக்ஷிணாமூர்த்தித் திருவிழாவும் சதாசிவப் பிரஹ்மேந்திரர் கட்டளைப்படி நடத்தப்பட்டன. சதாசிவப் பிரஹ்மேந்திரர் எழுதிக்காண்பித்த விடத்தி

னுள்ளமணலை யாசர்கொண்டுபோய்த் தேவஸ்தானத்தில்வைத்துப் பூஜித்து வருவாராயினர். அஃ திப்போதும் பூஜிக்கப்பெற்றுவருகின்றது. சதாசிவப் பிரஹ்மேந்திரர் புதுக்கோட்டைக்குவந்தநாள் முதல் தேசம் செழிப்படைந்ததுடன் தொண்டைமான் சக்ரவர்த்திகளும்கீர்த்தியும் பெருமையுமடைந்தனர். இக் கானகத்தில் இவர் நெடுங்காலமிருக்கவில்லை; ஆனால், யதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தனர். அப்படித் திரியுங்காலத்தில் ஐரோப்பவிலுள்ள துருக்கி (Turkey) தேசம்வரைக்குஞ்சென்றனர். பிறகவர் நெடுங்காலம் சமாதியிலிருந்தனர். அப்பாலொருநாள் அவர் யான் மிதுனரவிஜேஷ்டசுத்த தசமியன்று பரிபூரண மடைவேனென்றும் அன்று காசியிலிருந்து ஒரு பிராமணன் பாணலிங்கமொன்று கொண்டுவருவானென்றும், நெரூரிலுள்ளபிராமணர்களிடத்துச் சொல்லினர். மேலும், அந்தப்பாணலிங்கத்தைத் தமது சமாதிப்பக்கத்தில் பிரதிஷ்டைசெய்து கோயிலொன்று கட்டும்படியும் ஆக்கியாபித்தனர். குறிப்பித்தநாளில் காசியிலிருந்து ஒரு பிராமணன் பாணலிங்கத்தைக்கொண்டு வந்தனன்; அன்று சதாசிவப் பிரஹ்மேந்திரர் தமக்குத் தோண்டிவைத்த சமாதியில் தாமேயிறங்கிப் பரிபூரணமடைந்தனர்.

அவ்வூரிலுள்ளார் சமாதிகட்டி அதன்பக்கத்தில்கோயிலையுங் கட்டிச் செய்யவேண்டிய கிரியை யெல்லாவற்றையுஞ் செய்துமுடித்தனர். இவர் அதே காலத்தில் மூன்றிடத்திற் சமாதியாயினரென்று சொல்லப்படுகின்றது; ஆனால், நெரூரிலுள்ள சமாதிதான் தென்னிந்தியாவிற் பிரசித்திபெற்று விளங்குகின்றது. அந்தச் சமாதிக்கும் கோயிலுக்கும் வேண்டிய செலவிற்காகத் தொண்டமான் சக்ரவர்த்தி விஸ்தாரமாக மானியம் விட்டிருக்கின்றனர். இப்போதும், சதாசிவப் பிரஹ்மேந்திரர் குருபூஜை வருடந்தோறும் புதுக்கோட்டை ராஜாங்கத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றது.

தொண்டைநன்னாடு சான்றோருடைத் தென்றபடி இவ்வரிய மகாத்மா தொண்டைநன்னாட்டில் வாசஞ்செய்து தம்முடைய ஞான சீலமிகுதியால் விளங்கியிருந்தனர். யாவரு மவரை அப்போதன்றி இப்போதும் பூஜித்து வருகின்றனர். பூஜ்யராய் ஸ்ருங்ககிரியி லெழுந்தருளியிருந்த ஜகத்குரு சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி சுவாமிகளவர்களும் சதாசிவப் பிரஹ்மேந்திரரைப் பூஜித்திருக்கின்றனர்.

இப்பிரஹ்மேந்திரரை ஜகத்குருவே துதித்தாரெனின் நாம் அவரது பெருமையையெடுத்துச் சொல்லுத லமையுமோ?

சதாசிவப் பிரஹ்மேந்திரர் திருவாய் மலர்ந்தருளிய கிரந்தங்கள்:—

1. பிரஹ்ம சூத்திரவிருத்தி.
2. பன்னிரண்டுபநிஷத்துக்களுக்குத் தீபிகைகள்.
3. ஆத்மவித்தியா விலாசம்.
4. அத்வைதரசமஞ்சரி.

உபநிஷதார்த்த தீபிகை.

மஹோபநிஷத்

(211-வது பக்கத் தொடர்ச்சி.)

"சம்வத்சரங்க ளின்றி (அஃதாவது காலதத்துவ மின்றி)ப் பிரஜைகளுற்பத்தி யாவதில்லை. காலதத்துவத்தின் பின்னரே அவை உண்டாம்."

[உப] மறுபடியும் அந்நாராயணர் வேறு காமத்தை மனதில் தியானஞ் செய்தார். தியானத்திலிருக்கும் அவர் லலாடத்தி (நெற்றியி)னின்றும்முக்கண்ணுடையவரும் சூலபாணியுமான புருஷன் பிறந்தார். அவர் ஸ்ரீ சத்தியம், பிரஹ்மசர்யம், தபசு, வைராக்கியம், மனம், ஐசுவரியம், பிரணவத்துடன் கூடிய வியாகிருதிகள், ரிக் யஜுஸ், சாமம் அதர்வணம் (என்னும் வேதங்கள்), சந்தசுகளென்னுமிவை அவர் அங்கங்களில் ஆசிரயித்து(நிற்கின்றன).

[குறிப்பு] ஸ்ரீ என்றால் சோபை என்பர் நாராயணர். சங்கராநந்தர் ஸ்ரீ என்று படிக்கின்றார். மனமென்பதற்கு நாராயண ருரைப்படி ஞானமென்றுபொருளாம்; சங்கராநந்தருரைப்படி ஹிருதய கமலத்தில் ஸ்வாதீனமாயிருக்கும் அந்தக்கரணமாம். ஆசிரயித்து நிற்கின்றன வென்பதற்குச் சங்கரானந்தர் சாசுவதமாய் நின்றன என்று படிக்கின்றார்.

[உப] மறுபடியும் அந்நாராயணர் வேறுகாமத்தை மனதில் தியானம் செய்தார். தியானத்திலிருக்கும் அவருடைய லலாடத்தினின்றும் வியர்வை விழுந்தது. அது(தான்) இந்தமிகவும் விஸ்தாரமான ஜலங்கள். அவற்றினின்றும் தேஜோரூபமான ஹிரண்மயமான (சுவர்ணமயமான) அண்டம்(உண்டாயிற்று). அதினின்றும்சதுர்முகப்பிரஹ்மாபிறந்தார். அவர் (பிரஹ்மா) கிழக்கு முகமாயிருந்து தியானித்தார். (எதைத்தியானித் தா

ரேனின்) ஹூம்என்கிற வியாக்ருதி, காயத்திரி சந்தஸ், ரிக்வேதம் (இவைகளையும்), மேற்கு முகமாயிருந்து "ஹுவஃ" என்கிற வியாக்ருதி, த்ருஷ்டுப்சந்தஸ், யஜுர்வேதம் இவைகளையும் வடக்கு முகமாயிருந்து "ஸுவ: என்ற வியாக்ருதி, ஜகதீ சந்தஸ், சாமவேதம் (இவைகளையும்), தெற்கு முகமாயிருந்து "ஜஃ" என்கிறவியாக்ருதி, அநுஷ்டுப் சந்தஸ், அதர்வவேதம் (இவைகளையும் தியானித்தார்). 3(*a*)

[குறிப்பு) வியாக்ருதிகள் என்பன காயத்திரி மந்திரத்திற்கு முன் உச்சரிக்கப்படும் பீஜங்கள். காயத்திரி சந்தஸ் 24 அக்ஷரமுள்ளது. த்ரிஷ்டுப் 44 அக்ஷரமுள்ளது. ஜகதி 48 அக்ஷரமுள்ளது. அநுஷ்டுப் 32 அக்ஷரமுள்ளது, தேஜோரூபமான என்பதற்குச் சங்கராநந்தர் தேஜஸைப்பிரதானமாகவுடைய பஞ்சமகா பூதங்க ளென்று உரைசெய்கிறார். இதுவரை ஆதிநாராயணரிடம் உலகமுண்டானதைச் சொல்லி, பின்னர் அந்நாராயணரை விராட்ரூபமாய் ஸ்தோத்திரம் செய்கிறார்.

[உப] ஆயிரம் சிரசுடன் கூடினவரும், தேவரும் (சுயம்பிரகாசரூபமானவரும்), ஆயிரம் இந்திரியங்களுடன் கூடினவரும், ஜகத்தின் சுகத்திற் காதாரமானவரும், ஜகத்திற்கெல்லாம் மேலானவரும், சகல ஜகத்தானவரும், நாராயணருமான ஹரியை (அறியவேண்டும்). இச்சகத்தே புருஷன் (பரமாத்மா வென்றறி). அவனே ஜகத்தானது ஆசிரயித்து நிற்கும். சுகத்தைக் கொடுப்பவரும் ஜகத்துக்கெல்லாம் ஈசனானவரும் பிரகாச ரூபியானவரும் சமுத்திரத்தில் (சயனிப்பவரும்) சுகரூபமானவரும், விசுவரூபியானவருமாக அவரைஅறியவேண்டும்.) 3(*b*)

[குறிப்பு] ஹரிஎன்றால் பாபத்தையும் அஞ்ஞானத்தையும போக்குகின்றவர். (ஹர் - போக்குதல்). அவனே ஜகத்தானது ஆசிரயத்து நிற்கும் என்பதற்கு நாராயணர் பாடப்படி மொழிபெயர்பபு ; சங்கராநந்தர் பாடப்படி "அவர் ஜகத்தை (வியவகார நிமித்தம்) ஆசிரயித்து நிற்பர்" என்பது மொழிபெயர்ப்பாகும். சுகத்தைக் கொடுப்பவர் என்பதற்குச் சங்கராநந்தர் பாடப்படி மூலம் சதும்; நாராயணர் ரிஷிம் (சகலத்திற்கும் திர்ஷ்டாவாய்ச்சாக்ஷியாய் யிருப்பவனே)என்று படிக்கின்றார் . சமுத்திரத்தில் சயனிப்பார், சுகரூபமானவர். என்பதற்குச் சங்கராநந்தர்படி மூலம் சமுத்ரேகம். நாராயணர் சமுத்ரேதம் என்று படித்து சமுத்திரத்தை அஃதாவது க்ஷீரசாகரத்தை யடைந்தவர் என்று பொருள் சொல்வர்-இந்தச்சூக்தம் கொஞ்சம் பாடபேதங்களுடனும் அதிகரிக்குகளுடனும் தைத்திரீய ஆரண்யகத்தில் 10 வதுபிரபாடகம் 13 வது அநுவாகமாக நாராயண சூக்தமெனப் பெயர்கொண்டு நிற்கும். அவ்விடம் 12 வது அநுவாகத்தில் தகரவுபாசனுக்கிரகத்தைச் சொல்லி, அதனிடம் உபாசியமாகிய வஸ்துவின் ஸ்தலரூபத்தை நாராயண சூக்தத்திற் சொல்வர். இச்சூக்தத்தை அதர்வண சாகையின் மகா நாராயணோப நிஷத்திலும் பார்க்கலாம்.

அச்சகுணமாகிய நாராயணரை உபாசனையா லறியத்தக்க ஸ்தான த்தை மேற்சொல்லுகின்றார்.

[உப] தாமரை மொட்டுப் போலும், எங்கும் (கதலியின்) மொட்டுப் போலும் தொங்குகின்றது. இதுவே ஹிருதயம். (அது) அதோ முகமா யிருக்கும். அஃது எங்கும் சிகரங்களால் (வியாபிக்கப்பட்டு, பரப்பப் பட்டிருக்கும்). அதன்மத்தியில் மஹத்தான அக்கினி யெங்கும் பிரகாச முடையதாய் எங்கும் உடையதாய் (சர்வவியாபியாய்)நிற்கும். அதன் மத் தியில் அணுவைப் போன்றதும் (மிகசூக்ஷ்மமானதும்) ஊர்த்துவமான தும் (மேற் செல்லுகின்றதுமான) அக்னி சிகை நிற்கும். அச்சிகையின் மத் தியில் பரமாத்மாவாகிய புருஷன் நிற்பர். அவரே பிரஹ்மா, அவரே ஈசா னன் (சிவன்), அவரே அக்ஷரமானவர் (நாசமற்றவர்), மேன்மையானவர், ஸ்வராஜ்யமுடையவர் (ஸ்வதந்த்ர சக்திவாய்ந்தவர்). 3(C)

* சங்கராநந்தர் சுழத்ரோ என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள்சொ ல்வர். நன்றாய் (சம்யக்) துக்கத்தையும் அதன் காரணத்தையும் நாசம்செய் வதெதுவோ (திரவம் செய்தல்-நாசஞ்செய்தல்) அந்தப் பிரஹ்மாத்மைக்கிய மாகிய ஞானத்தினால் அடையக் கூடியவர்.

[குறிப்பு] நாராயணர் சீகரங்கள் என்றுபடித்து அதற்குப் பிராண னால் கொண்டுவரப்பட்ட ஜலபிந்துக்களெனப் பொருள் சொல்வர்; சங் கராநந்தர் சித்கரங்கள் என்றுபடித்து அதற்குக் குளிர்ந்தமாம்சம் அஸ்தி இவைகளால் ஹிருதயம் சூழப்பட்டிருக்கு மெனப் பொருள் சொல்வர். நா ராயண சூக்தத்தில் ஹிருதயபுண்டரீக மானது நாபிக்கு மேலும் கழுத்துக் குக்கீழுமுள்ளவிதஸ்தி என்றஇடத்தில் பனிரண் டங்குலப் பிரமாணமாய் நிற்குமென்றும், அதனிடம் ஜகத்திற் கெல்லாம் ஆதாரமாகிய பிரஹ்ம வஸ்துவை யறியலாமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. நாராயண சூக் தத்தில் சீகரங்கள் என்பதற்குப் பதிலாய் சிரங்கள் அஃதாவது நாடிக ளென்று பாடம்காணப்படும். ஆகவே, அப்பாடப்படி ஹிருதயகமலமானது நாடிகளாற் சூழப்பட் டிருக்குமெனப் பெறப்படும். மேலும், அதன்மத்தி யில் மிகவும் சூக்ஷ்மமான துவாரமிருப்பதென்றும், அதுவே சகல ஜகத் திற்கும் ஆதாரமானதென்றும், அத்துவாரத்தின் மத்தியிலே மகாக்னியி ருப்பதென்றும், அவ்வக்கினியே சாப்பிட்ட அன்னத்தை ஜீர்ணம் செய்து உடம்பு முழுதும் வியாபித்து நிற்குமென்றும் சொல்லும்; அந்தஅக்னி சிகையானது மிகவும் சூக்ஷ்மமானதென்றும், அது கறுத்த மேகத்தின் மத் தியிலுண்டாகும் மஞ்சள் நிறமுள்ள மின்னலைப் போல் பிரகாசியா நிற் குமென்றும் சொல்லும். இவ்வக்கினி சிகைதான் சுஷும்னையெனச் சொ ல்லப்படுமென வித்யாரண்யர் ஆரண்யக பாஷ்யத்திற் சொல்வர். பட்ட பாஸ்கரரோ அதைச் சீவனென்பர்,

மு. கே. நாராயணசாமி ஐயர்,
பி. எ., பி. எல்.

கிண்டர் கார்ட்டன்

என்னும்,

பாலபோதன முறை.

200-ம் பக்கத் தொடர்ச்சி.

எல்லாக் குழந்தைகளுக்கும் சுபாவமாயுள்ள முற்கூறிய குணங்கள் யாவும் நன்மையைத் தரத்தக்கவை யாகையால், அவைகளை உபாத்தியாயர் களும்பெற்றோர்களும்விர்த்தி செய்வது அவசியமாம்.எப்படிவிருத்திசெய்வ தென்பது மிகவுங் கவனிக்கத்தக்கது. இவ்விஷயத்தைப்பற்றிச் சில வருடங்களுக்கு முன் ஐரோப்பாக்கண்டத்தில் ஜெர்மனி தேசத்தில் இருந்த பிரடரிக்ப்ரோபெல் (Frederick Froebel) என்னும் மகாபுத்திமான் மிக்க ஆராய்ச்சி செய்து சிறு குழந்தைகளிடத்தில் என்னென்ன சுபாவகுணங்கள் பொதுவாயுள்ளன வென்றும், அவற்றை எவ்விதமாய் விருத்தி செய்யலாமென்றும்,நன்றாய் யோசித்துச்சிலமுறைகளை ஏற்பாடுசெய்திருக்கிறார். இம்மகான் தான் முதல் முதல் பிள்ளைகளுக்குப் பொதுவாயுள்ள சில குணங்களைக்கொண்டு அவற்றிற்குத் தக்கபடி பாடங்களைப் போதிக்கும் பாலபோதன முறையைக் கண்டுபிடித்தவர். இவருடைய சரித்திரம் பிறகு எழுதப்படும்.

இவர் குழந்தைகளிடத்துள்ள சுபாவகுணங்களை விர்த்தி செய்யக் கையாண்ட உபாயங்களாவன:—

சுறுசுறுப்பு: இக்குணத்தை விர்த்தி செய்ய முக்கியமாய் உபாத்தியாயர்கள் சுறுசுறுப்பாய் இருத்தல் அத்தியாவசியகமானது. "யதாகுரு: ததா சிஷ்ய:" உபாத்தியாயர் எப்படியோ அப்படியே பிள்ளைகளும் இருப்பார்கள். சில உபாத்தியாயர்கள் தங்கள் வகுப்பில் சற்றேனும் சப்தமில்லாமல் இருக்கவேண்டுமென்று பிள்ளைகளிடத்தில் பிரம்பைக்காட்டிப் பயமுறுத்தித்தாங்கள் நாற்காலியில் உறங்குவது சாதாரணவழக்கமாம். உபாத்தியார் உறங்கினதே பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சண்டைசெய்து அடித்துக்கொள்ளுவார்கள். பிறகுஅவர் விழித்துக்கொண்டு ஐந்து நிமிஷத்தில் போடக்கூடிய சிறுகணக்கைக் கொடுத்துப் போடச்செய்து மறுபடியும் உறங்குவார். கணக்குப்போட்டு ஆய்விட்டதென்று பிள்ளைகள்சொன்னால்,அதேகணக்கை அழித்துவிட்டு இன்னுமொருதரம் போடுங்களென்று சொல்லிவிட்டு உறங்கத் தொடங்குவார்.

இவ்வாறு உறக்கத்தின் மேலுள்ள அபிமானத்தினால் பிள்ளைகளுக்கு வேறு கணக்கையும் கொடுக்கமுடியாது,போட்ட கணக்கையே மற்றொரு முறை போடும்படி சொல்லும் உபாத்தியாயர் வகுப்பில் கற்கும் பிள்ளைகளின் சுபாவமான சுறுசுறுப்பு எவ்வாறு விர்த்தியாகும்? ஒருகாலும் விர்த்

,தியாகாது? விர்த்தியாவதற்குப் பதில் அழிவது நிச்சயம். ஆகையால், இக்குணத்தை விர்த்திசெய்ய உபாத்தியாயர்கள் சுறுசுறுப்பாயிருந்து ஐந்து நிமிஷத்தில் செய்யக்கூடிய ஒருவேலையை மூன்று நிமிஷத்தில் சரியாய்ச் செய்து முடிக்க பிள்ளைகளைப் பழக்கவேண்டும்.

மனக்கணக்குகள் கொடுத்துச் சுறுசுறுப்பாயும் திருத்தமாயும் செய்யும் பிள்ளையை உற்சாகப்படுத்தினல், மற்றவர்களும் சுறுசுறுப்பாயிருக்கப் பிரயத்னம் செய்வார்கள்.

சிறு குழந்தைகளுக்கெதிரில் சில புளியங்கொட்டைகளை இறைத்து "20 கொட்டைகளை எவன் முதலில் பொறுக்கிக்கொண்டு வருகிருனே அவன் கெட்டிக்காரன்" என்ருல் பிள்ளைகள் அதிக சந்தோஷமாயும் சுறுசுறுப்பாயும் பொறுக்குவார்கள். இஃது அவர்களுக்கு விளையாட்டு. இதனுல் சுறுசுறுப்பு விர்த்தியாகும்; விளையாட்டின் மூலமாய் 1 முதல் 20-வரையில் அவர்களை எண்ணவும் செய்கிருேம்; ஆகையால், இப்படிப்பட்ட விளையாட்டுகளின் மூலமாய்ச் சுறுசுறுப்பை விர்த்தி செய்யலாம்.

விளையாடுவதிலிச்சை: இந்தக் குணமானது பிள்ளைகளிடத்தில்சுபாவமாயிருப்பதால்தான் மேற்கூறிய புளியங்கொட்டை விளையாட்டினுல் கணக்கு எண்ணிக்கையையும் சுறுசுறுப்பையும் விர்த்தி செய்தோம். எப்படியொருதாயார் தன் குழந்தை இயல்பாய்ப் பிரியப்படாத மருந்தையோ அல்லது மாத்திரையையோ அக்குழந்தையின் தேக சௌக்கியத்தை அபேக்ஷித்து, அது சாதாரணமாய்ப் பிரியப்படும் வெல்லம் அல்லது தேனில் கொடுப்பாளோ அப்படியே பாலபோதகர்களும் அவர்கள் சுபாவமாய் இச்சிக்கும் விளையாட்டின் மூலமாய் அநேக விஷயங்களைக் கற்பிக்கலாம்.

நூதன விஷயங்களை அறிவதில் ஆவல்:—இக்குணத்தை விருத்தி செய்யப் பிள்ளைகள்முன் பற்பல விதமான வேடிக்கைப் பொருள்களை வைத்து, அவற்றைக் கவனிக்கச்செய்து, அவர்களைப் பஞ்சேந்திரியங்களி, னால் அவற்றைத் தொட்டும், உருசித்தும், முகர்ந்தும், பார்த்தும், விஷயங்களை அறியச்செய்தல் அத்தியாவசியகமானது. பிள்ளைகள்அவற்றை யுடைத்துப்பார்க்க இஷ்டப்பட்டால், அவர்களை அவ்விதம்செய்ய உற்சாகப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கேட்கும் பல கேள்விகளுக்குப் பதில் சொல்லி அவர்களைத்திருப்தி செய்யவேண்டும். சிறு கதைகளின் மூலமாய்ப் பற்பல விஷயங்களைப் போதிக்கவேண்டும். புஸ்தகங்களைப் பார்த்துப்படித்து விஷயங்களைத் தெரிந்து கொள்வதைக்காட்டிலும், ஒருவர்சொல்லக் கேட்டுத்தெரிந்து கொள்வது சுலபம். "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ, மச்செல்வம் செல்வத்து ளெல்லாந் தலை" என்று குறளாசிரியர் கூறியபடி இரண்டு கண்களும் இல்லாத பிறவிக் குருடரும் கேள்வியினுலேயே அநேக விஷயங்களை அறிதல் கூடும்.

ஆகையால், "நூதனமான விஷயங்களையறித" லென்னும் சுபாவ குணத்தைப் பிள்ளைகளிடத்தில் விர்த்தி செய்யும் உபாயங்களில் (முறைகளில்) கதைசொல்லுதல் முக்கியமானது. கதைகளினுல் நாம் குழந்தைகளின் மனதை வென்று அவர்களிடத்தில் சந்தோஷத்தை யுண்டு பண்ணலாம்; விசனத்தையும் உண்டாக்கலாம். சிறப்பையும் நன்னெறியையும் தாத்தக்க விஷயங்களை மெச்சவும், இழிவும் தீயனவுமானவற்றை வெறுக்கவும் செய்யலாம்.

வரும்.

N. சுப்பிரமணிய ஐயர்.

All rights reserved.

விசார சூடாமணி.

(186-வது பக்கத்தின் தொடர்ச்சி).

தொன்று தொட்டுக் கர்ண பரம்பரையாக வழங்கி வருஞ் சரித்திரங்கள் அரசனைக் கடவுளாகவும் அல்லது கடவுட்டன்மையில் பாதித் தன்மை வகித்தவனாகவுங்கூறுகின்றன. தொல்லரசர் குடிகளால் மானிடசக்தியினும் மேம்பட்ட சக்தியுடையோராயும் மானிடப் பிறவியினும் மேம்பாடுள்ள பிறவியுடையோராயும் மதிக்கப்பட்டு வந்தனர். கடவுளுக்குரிய பட்டங்களை வகித்தது மன்றி அவர்கள் தெய்வ சந்நிதானத்தில் நடக்கும் வந்தனை வழிபாடுகளைப்போன்ற மரியாதைகளையும் பெற்றுவந்தார்கள். சிலர் கடவுளைப் போன்று வணங்கப்பெற்றும் வந்தனர். இவைமுதலிய தன்மைகளுக்குரிய நம்பிக்கைகளுடன் அரசன் தன் குடிகளின் மீது எல்லை யற்ற அதிகார முள்ளோன், தன்னிஷ்டப்படி அவர்களை யுயிர் துறக்கச் செய்தலுங் கூடும் என்ற நம்பிக்கை ஜனங்களிடத்தில் குடி கொண்டிருந்தது. சில காலத்திற்கு முன்னர் நாகரிகமில்லாத ஒரு ஜாதியார் வாசஞ்செய்த ஒரு தீவில் குற்றவாளி ஒருவன் "அரசன் என்ன கட்டளை யிடுகிறானே அதை யவசியஞ் செய்தே தீரவேண்டும்" என்று தானே சொல்லிக் கொண்டு தன் மரணத்தை நோக்கித் தன் தலைவனிடுங் கட்டளையை எதிர்பார்த்துக் கைகட்டி நின்ற விஷயமே இதற்குச் சான்றாகும்.

இதர காலங்களில் இதர ஜாதியாருள் இத்தகைய நம்பிக்கைகள் சிறிது மாறுபாடடைந்துள்ளன. அவர்களால் அரசன் முழுக்கடவுளாகவும் அல்லது பாதிக்கடவுளாகவும் எண்ணப்படாமல், கடவுளைப்போன்ற அதிகாரத்தை வகித்த மனிதனாகவும் ஏறக்குறையக் கொஞ்சம் கடவுட்டன்மையை யுடையவனாகவும் பாவிக்கப்பட்டு வந்தான். கடவுளினிடத்திலிருந்து தோன்றியவன், அல்லது கடவுளோடு சம்பந்த முடையானென்பதைக் குறிக்

கும் பட்டங்களை அவன் தரித்து வந்ததுமன்றி, கடவுளை எத்தகைய மரியாதைகளாலும், வார்த்தைகளாலும் நாம் போற்றுகிறோமோ அத்தகைய வந்தனை வழிபாடுகளைப் பெறுபவனுமிருந்தான். சில விடங்களில் குடிகளின் ஜீவிய தசையும், சொத்துக்களும் ஆகிய முற்றும் அவன் வசத்தில்லாமலிருந்தபோதிலும், அவை பேருக்காவது அவனுடைமையாகவே பாவிக்கப்பட்டு வந்தன.

இதற்குமேல் நாகரீகம் மேலிட மேலிட அரசருக்கும் குடிகளுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் இன்னு மதிக மாறுபாடடைந்தன. தேவோற்பத்திக் கொள்கைக்குப் பதிலாக, அரசனுக்குத் தேக சுதந்திர முண்டு என்ற கொள்கை அங்கீகரிக்கப்பட்டது. கடவுளு மல்ல, பாதிக் கடவுளுமல்ல அல்லது கடவுளிடத்திலிருந்துதோன்றியவனுமல்ல; ஆனல் கடவுளுக்குப் பதிலாக நின்று காரியங்களை நடத்தும் புருடனாகவிருக்கிறானென்று அரசன் மதிக்கப்பட்டான். அப்பேர்து அவனுக்குச் செய்யப்படும் மரியாதைகள் அவ்வளவு பயபத்திரமானவையாயும் அடக்கமுள்ளவையாயு மிருக்கவில்லை. அவன் கொண்டுள்ள பரிசுத்த பட்டங்களோ வெகுவாய் அர்த்த மில்லாதனவாய்ப்போயின. அவன் அதிகாரமோ எல்லை யற்றதாக இல்லாமல் எல்லையுள்ளதாக முடிந்தது. தன்னிஷ்டப்படி குடிகளின் உயிரை வாங்கவும் சொத்துக்களை அபகரித்து விலை கூறவும் அவனுக்குள்ள சுதந்தரத்தைக் குடிகள் மறுத்து, அவன் கட்டளைகளுக்கு மட்டுமே நாம் அடங்கி நடக்க வேண்டுமென்று கொண்டனர்.

இதற்கு மேல் ராஜாங்க அபிப்பிராயங்கள் விர்த்தியாக விர்த்தியாக அரசனுடைய அதிகாரம் மேலுக்குமேல் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. சுபாவீக தர்மங்களைப்பெறுமல், அரசன் அபூர்வ சக்தியுடையோனென்ற கொள்கை ஐரோப்பியரால் வெகுகாலத்துக்கு முன்னரே தள்ளப்பட்டபோதிலும், அதன் காரியமாக அரசனுக்கு அசாதாரணமான நன்மைக் குணங்களையும், ஞானத்தையும் அழகையுங் கற்பிப்பது ஜனங்களுக்குப் பழக்கமாய்விட்டது. ராஜ விசுவாசம் என்பதற்கு ஆதியில் ராஜ இஷ்டத்துக்கு யாதொரு தடையுமின்றிக் கீழ்ப்படிதல் என்றர்த்தமாயிருப்பினும், இப்போது அந்த அர்த்தம் பேருக்கு மாத்திரம் கீழ்ப்படிதலையும் சில வகையான மரியாதைகளையும் உபசாரங்களையுஞ் செய்தலென்றே வழங்கி வருகிறது. சில அரசரைநீக்கியும் வேறு சிலரை அவர்கள் ஸ்தானத்தில் வைத்தும் வரும் வழக்கேற்பட்டதால், சில மனிதர் அரசாளுவதில் தெய்வ சுதந்தரம் பெற்றிருக்கின்றன ரென்பதை மறுத்தது மன்றித் தேசம் பிரஜைகளினுடைய சம்மதத்தின் காரணமாக வரும் சுதந்தரத்தைத் தவிர வேறு எவ்வித சுதந்தரமும் அவர்களுக்கில்லை யென்பதையும் ஸ்தாபித்தவர்களானேம். நம்முடையபாஷை முறைகளும் ராஜாங்கப் பத்திரங்கள் முதலானவைகளும் குடிகள் அரசனுக்கடங்கி யிருக்கவேண்டுமென்பதை 'வற்புறுத்தியபோதிலும், நம்முடைய உண்மையான நம்பிக்கைகளும், நடவடிக்

கைகளும் இதற்குமாறான கொள்கையையே மர்மமாக விளக்கிக்காட்டுகின்றன. அரசனுக்கு சட்ட திட்டங்களையேற்படுத்தும்படியான சக்தியை நீக்கி விட்டோம். அற்ப விஷயத்திலும் அரசனாவது அரசியாவது சம்பந்தப்படுவார்களேயானால் உடனே முரண்பட்டுக் கலகம் விளைவிக்குந் தன்மையுடையரா யிருக்கின்றோம்.

(தொடரும்)

சந்தோஷம்.

கவி சிகாமணியாகிய காளிதாசரது சரித்திரம்.

(208 ம் பக்கத்தின் தொடர்ச்சி).

மலர்ந்த மலர்களினின்றும் பெருகும் மகரந்தத்தைப் பருகி மெய்ம்மறந்து மதுரமாகப்பாடித்திரியும் வண்டினங்களை யொப்ப, மதுரமான மதுவினும் மேற்பட்ட சரசகவிதையின் ரஸதாரையைப் பருகி அகமகிழ்ந்து மதிமயங்கிப் பேரானந்தத்தை அநுபவிக்கும் ரஸிகர்கள், காவியத்தைப் படிக்கையில் கவியின் பெயரை மறந்து பிரமரகீடநியாயத்தை அநுசரித்துத் தாங்களும் கதாநாயகிகளாகவும் நாயகர்களாகவும் மனத்தினிடம் மாறி ஆத்மசுகத்தை யனுபவிப்பது வழக்கமென்பது அனுபவத்தினால் மாத்திரம் அறியக்கூடியவிஷயம். காவியத்தைப் படிக்கையில் கவியின் ஞாபகமே உண்டாவதரிதென்றால், கவியின் ஜீவகாலத்தைப் பற்றிநினைப்பது அசம்பவமாம். இதனால் கவிகளின் காலத்தையும் சரித்திரத்தையும் சரிவரத் தெரிந்துகொள்ள முயலுதல் பயனற்றதென்று நாம் கூறவில்லை. காவியத்தினின்றும் வாஸ்தவமான ஆத்மாநந்தத்தை அனுபவிப்பதற்கு அவ்விஷயம் ஒருபகாரணமல்லவென்று மாத்திரம் கூறுகிறோம். சரித்திரத்தைப் படிக்கவும் தேசசஞ்சாரம் செய்யவும் ஆவலுண்டாவது மனிதருக்கு இயற்கை. ஆனால், கவிகளின் காலத்தை நிர்ணயிப்பதற்கு ஆதாரமென்று நினைக்கப்பட்ட பற்பல கிரந்தங்களை யாராய்ந்து நூற்றாண்டுகளை மாத்திரம் சிற்சில காரணங்களைக் கொண்டு கணக்கிடுவதில் கவிகளின் யோக்கியதைகளின் தாரதம்மியம் ஏற்படுகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாகக் காளிதாஸகவியின் ஜீவகாலத்தை நிர்ணயிக்க முயற்சித்த பல மேதாவிகள் நூற்றாண்டுகளைச் சிலாசாசனங்களி னின்றும் தெரிந்தெடுத்துக் காளிதாஸகவி புத்தசரித்திர மெழுதிய அசுவ

கோஷ கவிக்குப் பிறகு இருந்தாரெனத் தீர்மானிக்கின்றனர். இவ்வாறு இவர்களுரைப்பதற்குச் சில காரணங்களுமுண்டு. அவை யாவன:— உவமையணி, அர்த்தாந்தர நியாஸாலங்காரம் ஆகிய இவ்விரண்டு அணிகளில் ஒன்றேனுமின்றிக் காளிதாஸ கவியின் காப்பியத்தில் ஒரு சுலோகத்தையும் காண்பதரிது. ஆனால், சாமானியமாக உவமாலங்காரத்தை எல்லாக்கவிகளும் உபயோகிக்கின்றனர். நாம் நினைக்கும் வண்ணம் உவமையணியைச் சாதாரணமாகப் பிரயோகித்தல் எளிதன்று. இரண்டு வஸ்துக்களுக்குச் சமமான சாதாரணதர்மம் இருந்ததானால் மாத்திரம்நல்ல உவமையணியென்று ஒப்புக்கொள்ளப் படமாட்டாது. அவ்வாறு இரண்டு வஸ்துக்களுக்கும் சமமாகவிருக்கும் குணம்பிரசித்தமாகத் தோன்றுவதோவென்றும், அது மகாகவிகளால் ஒப்புக்கொள்ளபட்டதோ வென்றும், அந்தக்குணத்தோடு கூடிய உவமையணியைக் கேட்டவுடன் மனதிற்கு இன்பம் விளைவிக்கிறதோ வென்றும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இவ்விதம் மனச்சந்தோஷத்தை விளைவிக்கும்படி கவிகளால் பிரயோகிக்கப்பட்டிருக்கும் உவமையணி பூர்ணோவமை என்றும் ஒப்போவமை என்றும் இருவகைப் படும். நம் கவிகோகிலம் பாடியிருக்கும் சுலோகங்களில் காணப்படும், உவமையணிகளில் மிகுதி பூர்ணோவமைகளாகவும் மனத்திற்கு அமிதமான ஆநந்தத்தை விளைவிப்பன வாகவு மிருக்கின்றன. அசுவகோஷ கவியெழுதிய புத்தசரித்திரத்திலும் பெரும்பாலும் உவமையணிகளும் மற்றுமுள்ள வர்ணனைச் சிறப்புக்களும் காளிதாஸ கவியின்காவியகுணத்தை யனுசரித்துக்காணப்படுகின்றன. மேலும் காளிதாஸகவியின் ரகுவம்சம் குமாரசம்பவம் ஆகிய காவியங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிற சுயம்வரமகோற்சவம் யுத்தயாத்திரைகள், தபோமாகான்மியம்முதலியவைகள் புத்தசரித்திரத்திலும் காணப்படுகின்றன. இக்காரணங்களால் காளிதாஸமகாகவிபுத்தசரித்திரத்தை நோக்கித் தம்முடைய காவியங்களிலும் மேற்கூறியவிஷயங்களை வர்ணித்திருக்கலாமென்று ஊகிக்கின்றனர்.

மலையருவி யெனப் பெருகும் மகிமைபெற்ற மதுரமான கவிதையையெழுதச் சாமர்த்தியம் வாய்ந்த இம்மகாகவி, மற்றவரது கவிதையை நோக்கி அதை அனுஸரித்துத் தாமும் தம் காவியங்களை நிரூபித்தார் என்று கூற நம்மனம் சம்மதிக்கவில்லை. இவ்வாறே, பிரசித்திபெற்ற சில கவிகளின் காலத்தை நிர்ணயிப்பதில்

அனுமான விஷயங்களைக்கொண்டு பற்பலர் பற்பலவிதமாகக் கூறுகின்றனர். இதற்கு நிதர்சனமாக 'வாஸவதத்தை' என்னும் வடமொழிவசன காவியத்தை எழுதிய சுபந்துகவியின் ஜீவகாலத்தைத் தீர்மானிக்கையில், இக்கவியின் காவியத்திற் காணப்படும் வர்ணனைகளில் மிகுதி பாணகவியினது 'ஸ்ரீஹர்ஷ சரித்திரத்திற்' காணப்படுதலால், பாணகவி சுபந்துகவிக்குப்பிறகு வசித்தார் என்பது சிலரின் கோட்பாடு. நன்முத்துக்களைத் தேடியெடுத்து மாலையிணைப்பதுபோல, பதங்களின் ஜீவதசையையறிந்து மதுரமான பதங்களை உசிதமான இடங்களில் சரசமாக இணைத்து வசனநடையின் ஜீவநாடியும் வர்ணனையும் அழகு கொஞ்சமும் லோபமடையாமல் எழுதுந்திறமை வாய்ந்த கவி பாணகவியினும் மிஞ்சிய அல்லது இவர்க்குச் சமனான வேறொரு கவியை நாம் அறிகிலோம்.

இவரது 'காதம்பரீ' என்னும் காவ்ய ரத்தினத்தில் சுகநாஸனின் உபதேசம், அச்சோத ஸரோவர்ணனம், மகாசுவேதா வர்ணனம், காதம்பரியின் விரகவர்ணனம் இன்னும் இவை போன்ற அநேக இடங்களைப்படித்து நோக்குவோமாயின், அரிய வசன நடையெழுதுதற்கு உரியவழியை மற்றக் கவிகளுக்கு உபதேசித்த மகாநுபாவன் 'ஸ்ரீபாணகவி' என்பதிற் சந்தேகம் நமக்குண்டாகாது.

குப்புசாமி ஐயர்.

(இன்னும் வரும்)

பிராணி சாஸ்திரம்.

(206 ம் பக்கத்தின் தொடர்ச்சி).

இவை வெளியில் பயப்படக் கூடியவை; ஆதலால், ஆகாரத்தை அதிக சீக்கிரமாய்ச் சம்பாதித்து வைத்துக் கொள்ள இவற்றின் வாயின் இருதாடைகளிலும் இரண்டுபைகள் இருக்கின்றன. இவை நிறைய ஆகாரத்தை நிரப்பிக்கொண்டு தம்மிருப்பிடம் சேர்ந்து மெதுவாக அவற்றை மென்று தின்னும். இவற்றிற்கு மனிதனைப் போலவே எல்லாவிதமான பற்களும் இருப்பதால், எந்தவிதமான ஆகாரத்தையும் தின்னும். முக்கியமாய்ப் பழங்கள், சிறுபூச்சிகள் முதலியவற்றைத் தின்னும்; பழக்கப்பட்டால் எதுவும் தின்னும்.

3 - வௌவாலினம்.

வௌவால் சாதாரணமாய் ஆகாயத்தில் பறந்தாலும் அது புட்சியல்ல. அது குட்டிபோட்டுப் பால் கொடுக்கிறது. அதற்கு ஆகாயத்தில் பறப்பதற்குக்கூடுமான அவயவம் சிறகுகளினால் ஆக்கப்படாமல் மெல்லிய தோலினால் ஆக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடைக்குக் கம்பிகள் எப்படியோ அப்படியே இதன் இறக்கை அவயவத்துக்கு இடையில் இதன் விரல்கள் உதவுகின்றன. இதழ் போன்றவாயில் பற்களுண்டு. நம் தேசத்தில் நாம்சாதாரணமாகப் பார்க்கக்கூடியவை துரிஞ்சல் வௌவால் நரிவௌவால்முதலியன. 'மாம்பழுத்தால் வௌவாலே வாவென்று கூவி, இரந்தழைப்பார் யாவருமிங்கில்லை'' என்றபடி இதன் முக்கிய ஆகாரம்பழங்கள். சில வௌவால்கள் சிறிய பூச்சிகளையும் பிராணிகளின் இரத்தத்தையும் உறிஞ்சுகின்றன. சூரியவெளிச்சத்தில் இதன்கண்கள் கூசும். ஆகையால் இவை பகலில் இருட்டறைகளிலாவது, இலைகளடர்ந்த மரங்களிலாவது தலைகீழாய்த் தொங்கிக் கொண்டிருந்து இரவில் இரைதேடப் போம். மழைக்காலங்களில் வௌவால்கள் தங்கள் கூடுகளில் பதுங்கியிருந்து பிறகு வெளிப்படும்.

4 - பூச்சிகளைத் தின்று ஜீவிக்கும் பிராணிகள்.

அகழ் எலி, மூஞ்சூறு, வேலிப்பன்றி (Hedge hog.) முதலியவை இவ்வகுப்பில் சேர்ந்தவை. இவற்றின் பற்கள் பூச்சிகளைப் பிடித்து மெல்லத் தகுந்தவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன.

அகழ் எலி (Mole) க்குக் கண்களும் காதுகளும் மிகச்சிறியவை; ஆனால் மிக்ககூர்மையுள்ளவை. இது பூமியில் வளைதோண்டிக்கொண்டிருக்கும். இதன் கால்களில் நகங்கள் மிக்க கூர்மையாயிருக்கும்.

5 - அரிக்கும் ஜந்துக்கள்:

இவ்வகுப்பு ஜெந்துக்களுக்கு முன்வாயில் கத்தரிக்கோலைப் போன்ற வெட்டும் பற்கள் இருப்பதால், இவற்றை மற்ற ஜெந்துக்களினின்றும் எளிதில் பகுத்தறியலாம். இவ்விதமான பற்களுக்கும் மற்றப்பற்களுக்கும் வித்தியாசமென்னவெனின் சாதாரணமான பல் முழுதும் வளர்ந்தபிறகு மறுபடியும்வளருவதில்லை. அன்றியும் வயதாகிவிட்டால் தேய்ந்துபோகும். அரித்துக்கொறித்தின்னும்

சுபாவமுள்ள எலி, முயல், அணில் முதலிய ஜெந்துக்களுக்கோ அவை சாகிறவரையிலும் பற்கள் வளர்ந்து கொண்டேயிருக்கும். இச்செந்துக்கள் அடிக்கடி பற்களையுபயோகிப்பதனால் இவற்றின் பற்கள் சீக்கிரத்தில் தேய்ந்து போகும். அப்படித்தேய்ந்தவை மறுபடியும் வளரும். இவ்விதமான பற்கள் மரத்தைக் கொந்தவும் செடிகளைக் கடித்துத் துளைக்கவும் கடினமான கொட்டைகளை அரித்துமெல்லவும் தகுதியாயிருக்கின்றன. இவ்வினத்தில் எலி, பெருச்சாளி, அணில், முயல், குழிமுயல், நீர்நாய் முதலியவை அடங்கும். அணில், முயல், குழிமுயல் முதலியன சாகபக்ஷணி. அணில் மரங்களின்மீது தாவியோடிக்கொட்டைகளையும் பழங்களையும்தின்னும். முயல் புல் பூண்டுகளைத் தின்னும். நீர்நாய் ஜலத்தில் சஞ்சரிக்கும்.

6- பல்லில்லாத ஜெந்துக்கள்.

மனிதன் உட்பட, மம்மேலியா வகுப்பைச் சேர்ந்த பிராணிகளெல்லாம் மூவகைப் பற்களை யுடையனவா யிருக்கின்றன. அவை யாவன:—

1. முன்வாய்ப்பற்கள் அல்லது கடிக்கும் பற்கள்.
2. இரண்டு தாடைகளிலும் வெட்டும் பற்கள்.
3. கடைவாய்ப் பற்கள்.

இப்பற்கள் அந்தந்த ஜெந்துவின் ஆகாரத்துக் கிசைந்தவாறு சிலவற்றிற்குக் கடைவாய்ப்பற்கள் மாத்திரமும், சிலவற்றிற்கு வெட்டும் பற்களும் கடிக்கும் பற்களும், மனிதன் குரங்குபோன்ற பிராணிகளுக்கு மூவகைப்பற்களும் அமைந்திருக்கின்றன. ஆனால் நாம் அடியிற் கூறும் ஜெந்துக்களிற்கோவெனின், பெரும்பாலன வற்றிற்குப் பற்களே கிடையா. சிலவற்றிற்குப் பலமில்லாத கடைவாய்ப்பற்கள் மாத்திரம் உண்டு. இப்பிராணிகளின் நகங்கள் நீண்டு கூர்மையா யிருக்கும். தேவாங்கு (Sloth), எறும்பு தின்னி (Anteater), கவசமிருகம் (Armadillon) முதலியவை இவ்வினத்திற் சேர்ந்தவை.

தேவாங்குக்கு ஆங்கிலேய பாஷையில் (Sloth) ஸ்லோத் என்று பெயர். ஸ்லோத் என்றால் சோம்பேறி என்று அருத்தம். இவை சாதாரணமாய் மரக்கிளைகளைத் தம் கால்களால் பிடித்துத்

தொங்கிக் கொண்டிருக்கும். நத்தையும் இதைக்காட்டிலும் வேகமாயோடுமென்றால் இதைப்பார்க்கிலும் மந்தமான ஜெந்து உலகத்தில் இல்லை யென்பது திண்ணம்.

எறும்பு தின்னியின் நாக்கு நீண்டு சிக்ப்பாய் ஒரு புழுவைப் போல் இருக்கும். இந்நாக்கின் மேல் ஒருவித பசையுண்டு. இப்பிராணி தந்நாக்கை எறும்புவளைகளில்விட எறும்புகளெல்லாம் இதனுடைய நாக்கில் ஒட்டிக் கொள்ளும். இவ்விதமாக இது தனக்கு இரையாக எறும்பு செல்லெறும்பு முதலியவற்றைப் பிடித்து விழுங்கிவிடும்.

ஆர்மடில்லன் அல்லது கவசமிருகத்தின் மேல் வீட்டின் கூரையின் ஓடுகளைப் போல் ஒன்றன் மேலொன்றாய் முளைத்த செதில்களுண்டு. இதற்கு அபாயம் நேர்ந்தபோது தன்னை வளையம் போல் சுற்றிக்கொள்ளும். இதுவும் சிறு பூச்சி புழுக்களைப் பிடித்து விழுங்கும் தன்மை யுடையது. இதற்குச் சிறுபற்கள் இருந்த போதிலும் மென்று தின்ன உபயோகமில்லை.

7. சாகபக்ஷிணி.

புல், பூண்டு, தழை, தளிர் முதலியவற்றைத் தின்னும் பிராணிகளுக்கு சாகபக்ஷிணி யென்று பெயர். இவ்வினத்தில் அநேகம் ஜெந்துக்களடங்கும். இதிலடங்கிய உட்பிரிவுகளாவன:—

1. ஒற்றைக் குளம்புள்ளன.
2. இரட்டைக் குளம்புள்ளன.
3. தடித்த தோலுள்ளன.
4. அடிவயிற்றில் குட்டிகள் தங்கும்படியான பையுள்ளன.

1. ஒற்றைக் குளம்புள்ளன.

சாகபக்ஷிணியில் ஒற்றைக்குளம்புள்ள ஒருபிரிவில் குதிரை, கழுதை, கோவேறுகழுதை, வரிக்குதிரை முதலியன வடங்கும். இப்பிரிவில் குதிரை முதன்மையானது. குதிரைகளில் அரபிக் குதிரை சிரேஷ்டமானது. ஷெட்லாண்டு பெரு முதலிய தேசங்களிலிருக்கும் மட்டக் குதிரைகளும் சிறந்தவையே. இம்மட்டங்களில் சில 34 அங்குல உயர மிருக்கிறது. இவற்றின் கால்கள் உறுதியும் கறுக்காதவையு மானதால் செங்குத்தான மலைகளின் மேல் ஏறும்போதும் இதன் மேலே உட்கார்ந்து போகலாம்.

நும் மிந்தியாவில் கழுதையை இழிவான பிராணியென்று அதை ஒரு வேலைக்கும் உபயோகிப்பதில்லை; சரியாகவும் பாதுகாப்பதில்லை. ஐரோப்பாக் காண்டத்தார் இதைச் சரியாய்ப் பாதுகாத்து அநேக வேலைகளுக்கு உபயோகித்து வருகிறார்கள். இது பார்வைக்கு அவலக்ஷணமாக விருந்தபோதிலும் இதன் தேகம் சுத்தமானது. இஃது எப்போதும் சுத்தமான ஜலத்தையே குடிக்கும். மேற்கூறிய ஜந்துக்களுக்கு மேல்வாயிலும் கீழ்வாயிலும் பற்களுண்டு. இவை புல்மேயும்போதே அதை நன்றாய் மென்றுதின்று விடும். இவைகளுக்கு ஒரே இரைப்பையுண்டு. இவை அசை போடா.

(வரும்.)

N. சுப்பிரமணிய ஐயர்.

இந்துமதமாவதென்ன?

(ஒரு மகாத்மாவின் பிரசங்கம்).

இன்றைய தினம் உபந்நியாசத்துக்கு ஏற்படுத்தியிருக்கும் விஷயத்தைப்பற்றி என்னையும் சில அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி இரண்டொருவர் கேட்டபோது எனக்கு மதசம்பந்தமான விஷயங்களில் அதிகப் பழக்க மில்லையென்று தெரிவித்தும், அவர்கள் தங்களால் கூடிய வரையிலேனும் உபந்நியாசஞ் செய்யத்தான் வேண்டும் என்று உத்தரவு செய்தனர். அதைத்தடுக்க முடியாதவனாய்ப் பிரசங்கஞ்செய்ய ஒத்துக்கொண்டேன்.

1 - வது விஷயம்:—என்ன விஷயத்தை உத்தேசித்து இப்போது நாம் இவ்விடத்தில் கூடியிருப்பது? "இந்துமதமாவதென்ன" என்கிற விஷயத்தைப்பற்றிச் சிலர் உபந்நியாசம் செய்யவும் மற்றெல்லோருமதைக் கேட்கவுமல்லவா?

2 - வது சம்பந்தம்:—எவ்வளவோ விஷயங்கள் உபந்நியாசிக்கத் தக்கனவாயிருக்க, இவ்விஷயத்தைத ஏற்பாடு செய்துகொண்ட காரணமென்னவெனின், இந்துமதத்தின் ஆழ்ந்த கருத்துக்களை இந்துக்களாயிருக்கும் அநேகர் தெரிந்திராதவர்களா யிருக்கின்றமையின் அவர்கட்கு இக்கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டுமென்னுங் கருத்தைக் கொண்டுதான்.

3 - வது பயன்:—ஆனால், மேற்சொன்ன இக்கருத்துக்களை வெளியிட்டால்அதுபயனை [விளைக்குமோவெனின், இந்துமதத்தின் ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிந்துகொண்டிராத காரணத்தால்பலர் தற்காலத்தில் புறமதாபிமானிகளாய் வருகின்றனர்; அதைப்பார்க்கிலும்கூடியசீக்கிரத்தில் இதர மதங்களைத் தழுவுவார்களென்றெண்ணுவதற்குப்போதுமானகுறிகளிருக்கிறபடியால் அவ்விபரீதத்தை இப்படிப்பட்டஉபந்நியாசங்கள்தடுக்குமென்பதுதான் பயன்.

4 - வது அதிகாரிகள்:—ஆனால் இம்மதத்தின் கருத்துக்களை வெளியிடவும் மேற்படி பயனைக் கருதவும் நாம் அதிகாரிகள்தானோவென்று தெரிந்துகொள்வது ஆவசியகந்தான். திரவியவந்தர் ஒருவர் வைத்துவிட்டுப் போன பொருள்களைப் பின்னுள்ளோர் அநுபவிக்குந் தன்மையால் உத்தமர், மத்திமர், அதமரென மூன்றுவிதமாய்ச் சொல்லப்படுகிறார்கள். அஃதாவது (1) திரவியத்தை விருத்திசெய்தும், தானுமனுபவித்தும், கூடியமட்டும் அந்நியருக்கும் சகாயஞ்செய்கிறவன் உத்தமனெனவும், (2) விருத்திசெய்து தான்மாத்திரம் அநுபவிக்கிறவன் மத்திமனெனவும், (3) விருத்திசெய்பச் சக்தியில்லாவிட்டாலும் இருந்தவரையிலேனும் அநுபவிக்கத் தெரிந்துகொள்ள வகையில்லாதவனாய்ப் பொருளை யிழந்து விடுகிறவன் அதமனெனவும் சொல்லப்படுவது உலகவழக்கமாம். இப்படியே நம்முன்னோர்களாகிய மகரிஷிகளால் நமக்காக வைத்துவிட்டுப்போன ஆத்மார்த்தப் பொருளைக் கிரகித்து வருவதால் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தை விருத்திசெய்துகொள்ளவும், விருத்தி செய்துகொண்ட மாத்திரத்தாலேயே திருப்தியடைந்திராமல் விஷயங்களைப் பழக்கத்தில் கொண்டுவருவதால் அவ்வாத்மப்பொருளை யனுபவிக்கவும், இவ்வநுபவத்தின் விசேஷத்தையும் பிரயோசனத்தையும், தத்தமக்குந் தெரிந்தவளவு சொல்லுவதால் அந்நியருக்கும் மேற்படி பொருளை யுபயோகப் படுத்துதலுமாகிய இம்மூவித சுதந்தரங்களுக்கும் சுதேச வாசிகளாகிய நாமே அதிகாரிகளல்லது வேறெவரேனு மல்லர்; இன்றைய தினத்தின் உபந்நியாசத்தின் விஷயம், சம்பந்தம், பயன், அதிகாரம் இந்த நான்கையுந் தெரிந்துகொண்டபிறகு இப்போது விஷயத்துக்குத் திரும்பவேண்டியதாம்.

'இந்துமதமாவ தேன்ன' என்று கேள்விரூபமா யிருக்கிற இந்த விஷயத்தைப்பற்றி உபந்நியாசஞ் செய்கிறவர்கள் தாங்கள்

செய்யு முபந்யாசத்தின் மூலமாய் இக்கேள்விக்கு மறுமொழி கொடுக்கவேண்டியவராவர். ஒருவர் மற்றொருவருக்குத் தங்கருத்தை வெளியிடுவது வாக்கியமூலத்தினலல்லது வேறல்ல. வாக்கியங்கள் பதங்களினு லமைவனவாம். சில பதங்கள் கேட்கிறவர்கள் தம்முடைய அர்த்தத்தைவிட்டு வேறொரு அர்த்தத்தையுங் கொள்ளுவதற்கு இடந்தரத்தக்கன வென்று தமக்கே தோற்றுகிற பட்சத்தில் அப்படிப்பட்ட பதங்களுக்குத் தாம் உபந்யாசஞ் செய்யப்புகுந்த ஆரம்பத்திலேயே எந்தப்பதத்துக்கு எந்தவிடத்தில் தாம் எந்த அர்த்தத்தை யுபயோகிக்கப் போகிறோமோ அதை ஆரம்பத்திலேயே தெரிவிக்காதபட்சத்தில் கேட்கிறவர்களால் விஷயம் நன்குணரப்படாதென்கிற காரணத்தால், இந்து மதமாவதென்ன வென்னும்விஷயத்தில் மதம் என்கிற பதமானது மேற்சொல்லிவந்த விஷயத்துக்குட்பட்டதென எனக்குத் தோற்றுகிறபடியால் முன் இப்படிப்பட்ட தன்மையோடு கூடியிருப்பது மதம் எனப்படுமென்று தெரிவித்து, பின் இந்துமதமாவதென்னவென்று தெரிவிக்கமுயலுவேன்.

மதம் என்னும் பதார்த்தம் பொதுத் தர்மத்தையுடையது. இன்ன விஷயத்தை இம்மாதிரியாய்த் தெரிவிப்பது தான் மதம். என்று கணித்து எல்லோராலும் ஒப்புக்கொள்ளத்தக்கதாய் இப்பதத்துக்கு ஒரு விவரத்தையும் எல்லையையுங் கண்டு பிடிக்க அநேக தத்துவ பரிசோதகர்கள் முயன்றும் கடைசியாய் முடியாமையை வெளியிட்டார்கள். இப்பதத்தின் தன்மை பாட்டையிலிருக்கிற ஒருபெரிய மரத்துக் கொப்பாயிருக்கிறது. எப்படியெனின், இம்மரமானது பாட்டை சாரிகளாகிய வெவ்வேறு தன்மையுடையவர்கள் தன்னிடத்தில் வந்து தங்கும்போது எல்லோருக்கும் எப்படிப் பொதுவாய் நிழல் கொடுக்கின்றதோ அப்படியே வெவ்வேறு கொள்கைகளும் வெவ்வேறு விஷயங்களும் அடங்கியிருப்பதை யெல்லாம் மதம் மதம் என்னுஞ் சொல்லும் அநேகருக்குத் தான் பொதுவாய் இடங்கொடுத்திருக்கிற காரணத்தால், இதை மரத்துக் கொப்பிட்டோம். சில மதங்கள் கடவுள் விஷயத்தை மாத்திரம் சொல்லியிருக்கும்; அவைகளும் மதந்தான், சில மதங்கள் மதமும் ராஜ தந்திரங்களுந்தெரிவித்திருக்கும். அவையும் மதந்தான்; சில மதங்கள் கடவுள் விஷயமும் நீதி மார்க்கமுஞ் சொல்லியிருக்கும்; அவையும்மதந்தான். இருந்தாலும் எல்லாக்கொள்கைகளிலிருக்கும் பொதுத்தன்மையை யெடுத்து இப்பதத்தை

விவரித்திருக்கிற இரண்டொருவருடைய அபிப்பிராயத்தைப் பார்ப்போம். ஜர்மனி தேசத்தில் சில வருடங்களுக்கு முன்னிருந்த காண்ட். (Philosopher *Kant*) என்பவர் மதம் என்பது நீதி என்று அபிப்பிராயங் கொண்டார். காரணம், நம்மைப்போன்ற ஜீவர்களிடத்து நாம் பாராட்டவேண்டிய காருண்ணியத்தையும் கடவுளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய தன்மையையும் ஆவசியகத்தையும் தெரிவிக்கிறது மத மாமென்பதாம். ஆனல் இவர்க்குப் பின்வந்தஅதே தேசவாசியாகிய பிட்சி (Fitche)யென்கிறதத்துவ பரிசோதகர் மதம் என்பதுஞானம் என்றபிப்பிராயங்கொண்டார். ஏனெனின், ஜீவர்களிடத்தும் கடவுளிடத்தும் நாம் நடந்து கொள்ளவேண்டிய தின்னவிதம் என்கிற ஞானம் உண்டான பிறகல்லவா நீதியின்படி நடக்கவேண்டும். ஆகையால் இவைமுதலிய ஞானத்தைத் தெரிவிப்பது மதம் என்றபிப்பிராயப்பட்டார்.

வரும்.

ஹிதவசனி.

உலகத் தியல்பு.

ஒவ்வொரு மனிதனும் கண்திறந்து பார்க்கும் போது அவனுக்கு முதலில் ஏதோஒரு பதார்த்தம் புலப்படுகிறது. அப்படியே அவன் பார்க்கப்பார்க்க அவனுக்கு எண்ணிறந்த பதார்த்தங்கள் தோன்றுகின்றன. இவற்றுள், சில முன் பார்த்தன வாகவும், மற்றுஞ்சில முன் பாராதனவாகவு மிருக்கும். இப்படிப் பார்க்கும் புருடனுக்கு முன் புலப்படாதவை காலத்தாலும் தேசத்தாலும் பலகோடியாம். இவ்வாறிருக்கும் இவற்றின் மொத்தத் தொகையைப் பிறனொருவனுக்குச் சொல்ல வேண்டிய அவசரமும் நிகழ்தலினல், இந்த அகண்டமான கூட்டுத் தொகைக்கு உலகம் என்று ஒரு நாமம் சூட்டப்பட்டது. இவ்வெண்ணிறந்த பதார்த்தங்களில் சிலதாமாகவே சலித்து, ஓடி, ஆடி, பாடி, பகுத்தறியும்; மற்றவை யப்படி யல்லாதிருக்கின்றன. இவற்றின் முதற் பகுதிக்கு மனிதன் என ஒருபொதுப் பெயர் வழங்குகிறது. மற்றப்பகுதியி லடங்கியவை தாமாகச்சலித்தல் முதலிய சிறந்தகுணங்களில் சிலவற்றை ஏற்றும் மற்றவற்றை ஏற்காதும் இருக்கின்றன.

இரண்டாவது வகுப்பில் சேர்ந்தவைகளையும் பிரிக்கவேண்டின், யானை குதிரை முதலிய மிருகங்களும் ஈ,எறும்பு, கொசுகு மோட்டுப்பூச்சி, பாம்பு, தேள், மீன் முதலிய ஜந்துக்களும், மயில் குயில் மைனு முதலிய பட்சிகளும், கொடி செடி புல் பூண்டு முதலிய தாவரங்களும், பொன் வெள்ளி முதலிய லோகங்களும், கல் மண் முதலிய பேதங்களும், இவைபோல்வன பிறவும் யூகிக்கத்தக்கவையாம். முதல்வகுப்பி லுள்ளவர்கள் மேற்கூறிய இரண்டாவது வகுப்பிலுள்ள எல்லாவற்றையும் தமக்குவேண்டியவாறு அப்படியப்படியேயாவது அல்லது மாற்றியாவது உபயோகம் செய்து அத்தொழிலால் வேண்டியபயனை அடையுஞ் சக்தியுடையராயிருப்பது அநுபவசித்தமாம்; ஆனாலும் அவைசெய்யக் கூடிய (அஃதாவது தாமாகப் பறத்தல் முதலிய) சிற்சில காரியங்கள் இவர்களால் சாதித்தல் முடியாது. இப்படிச் சிறப்பாய் அவைகளிடம் உள்ளவை யியற்கையில் ஏற்பட்டனவே யொழிய செயற்கையன்று. மனிதனே இயற்கையில் தனக்குச் சுதந்தரமில்லாதவைகளையுந்தன் முயற்சியால் தனக்குச் சாதனமாக்கிக் கொள்ளும் சக்தியுடையான். இவ்வாற்றான் எப்படி சீர்தூக்கிப்பார்க்கினும் மனிதனே மற்றவற்றிலும் சிறப்புற் றிருக்கிறான். ஈதன்றியும் நன்மை தீமைகளை பகுத்தறிதலாலும் மேம்பட்டிருக்கின்றான். இறைவனுளன் என்னும் மேலாயஞானமும் மனிதனிடத்திலே மாத்திரம் உண்டென்றும் மற்றவற்றிலில்லை என்றும் கற்றறிந்தோர் கூறுகிற்பர். இதுவும் மனிதனை மிக உத்கிருஷ்டஸ்தானத்திலேற்றிவிடுகிறது. ஆகவே இவன் நிலையைச் சோதிக்கில் மற்ற எல்லாவற்றின் நிலைகளையும் பெரும்பான்மையும் சோதித்ததாக முடியும்.

பொருள்களின் தொகுப்புக்கே உலகமெனப் பெயரிடப்பட்டிருப்பதென்று முன்னரே கூறப்பட்டது. பொருள்களின் வகை எண்ணிறந்தன வல்லாது மிகச்சிலவே யிருக்குமாயின், அப்போதும் அதன் தொகுப்புக்கு உலகமெனப் பெயர்வருமாவெனின், இச்சங்கை பொருந்தாது; ஏனெனின், இரண்டு அல்லது அவைக்கு மேற்பட்ட எத்தனைபதார்த்தங்களுளவாயினும்அவைதம் தொகுப்புக்குக்கொடுக்கப்பட்ட நாமமேயிதுவாம். ஆனால், பொருள்கள் இப்போதிருப்பது போன்றிராது ஒன்றாகவே யிருக்குமாயின், அதற்குத்தன்சொந்த நாமமேசாலும்;உலகமென மற்றொருநாமம் வே

ண்டியதின்று. தனக்கெனச் சொந்தமில்லாத இத்தகைய உலகத்தை மேல் சோதிப்பதும் ஆவசியகமாகையால் அது செய்வான் வேண்டி அதன் கண்ணிலிருந்து அதற்குக் காரணமாவன சிலவற்றை விசாரிப்பின் அதனையே விசாரித்ததாகும்; ஆகவே, உலகம் உலகம் என நம்மால் கொண்டாடப்படும் இதற்கு உள்ள பொருள்களைத்தவிர அஃதாவது இதன் காரண பதார்த்தங்களைத்தவிரத் தனக்கெனச் சொந்தமாக வேறொரு பதார்த்த மிருப்பதாக எச்சாஸ்திர வாதியும் சொல்ல முடியாதென்பது திண்ணம். ஆகையால், உலகம் பிறவற்றைக் கோராததனி முதலன்று; அஃதாவது காரியமே என்று ஏற்படுகிறது. மேலும், உலகத்தைக்குறிப்பிக்க வேண்டி வந்த காலத்து எவரும்கையைத்தூக்கிஎதிரிலுள்ள பொருள்களை அல்லது தரையையே காட்டுகிறார்கள். நம்மால் அடிக்கடி கையாளப்படும். ஒரு புத்தகத்தைச் சற்றுக் கவனிப்பாம். காகிதமும்மேலட்டையும் தவிரப்புத்தகமென்பது இல்லவேயில்லை. ஆகையால், இப்புத்தகம் தன் காரணங்களின் தர்மங்களைத்தவிர, வேறொரு தர்மங்களை யுடையதன்று. அதுபோல உலகமும் தன் காரணமான பொருள்களின் தர்மத்தையே பொருந்தி யிருக்கிறது. ஆகவே, உலமென்னும்சொல்லுக்குப் பொருளும் தர்மமும் பதார்த்தங்களும் அவை தம் தர்மங்களுமாம்.

பதார்த்தங்க ளெல்லாம் தனித்தும் கூடியுமிருக்கின்றன. கூடியிருக்கும் அவையும் சூட்சும திருஷ்டியால் பார்க்கின், தனித்தனியா யிருப்பதாகவே ஏற்படும். இப்படி யிருக்கும் இவைதமிருப்பை யோசிப்பதும் ஆவசிகமாகையால், அது செய்வாம்.

வா-ஆறுமுகசெட்டியார்.

முத்தியாலுபேட்டை, சென்னை,

நடுநிலை தானே ஞான சமாதி.
சித்த சாந்தியே சிதம்பர மாகும்.
சத்திய நன்னிலை சாவைத் தினம்நிலை.

பெண் கல்வி.

(204-ம் பக்கத் தொடர்ச்சி).

புருடர்கள் கல்வி கற்று அக்கல்வியா லடைந்த ஞானத்தின் பயனை முற்றும் அனுபவிக்க வேண்டுமாயின், ஸ்திரீகளும் கற்றவர்களாயிருத்தல் அத்தியாவசியகமா மென்பது முன்னரே கூறப்பட்டது. இதனால், பெண்களுக்குக் கல்வி அத்தியாவசியகமாமென்பது முடிவாகப் பெறப்பட்டது. இனிப் பெண்களுக்கு எவ்விதமாகப் படிப்புக் கற்பிப்பது நலம்? எத்தகைய வுபாத்தியாயர்களால் கற்பிப்பது தகுதி? பாடசாலையிற் கற்பிப்பது நலமா? அல்லது வீட்டிலேயே தகுந்த உபாத்தியாயர்களைக் கொண்டு கற்பிப்பது உசிதமா? எந்தவயது வரையில் படிப்பிக்கலாம்? எந்தெந்த விஷயங்களில் அவர்களுக்குத் தேர்ச்சியுண்டாக்கலாம்? என்பனவற்றைப்பற்றிச் சற்று யோசிப்போம். பெண்கள் தங்கள் வாழ்நாளில் 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' என்று கூறியபடி பதிபக்தியும், அவர்க்குப் பணிவிடையும், அவருடைய மனதுக்கு ஒத்து நடத்தலும், தர்மசிந்தனையும், ஜீவகாருண்யமும், குழந்தைக ளிடத்தில் அன்பும், குடும்பத்தில் பெரியோர்களான மாமனார் மாமியார் முதலியவர்க ளிடத்தில் பயபக்தியும், அடக்கமும், கணவன் ஸுகதுக்கங்களைத் தனதாகக் கருதலும், குடும்ப காரியங்களைச் செவ்வனே நடத்துந் திறமையும் உடையவர்களாயிருக்க எவ்விதப் படிப்புங்கற்பிப்பது தகுதியோ அவ்விதப்படிப்புக் கற்பிப்பதுதகுதியாம். தெளிவாகக்கூறின், அங்கமெல்லாம் குழைந்தழுகித் துர்நாற்றம் வீசும்குஷ்டரோக சரீரத்தையுடைய மௌத்கல்யரை வெறுக்காத நளாயினி, வகபுத்திரனும், இளவரசுமாகிய தனது மைந்தனை மாற்றாள் நிமித்தம் வனம்புக வரம்தந்து கணவனை வெறுக்காத கோசலை, தன்னை விற்றுகினும் தருமத்தையும் சத்தியத்தையும் தவறாமல் செய்ய வற்புறுத்திய சந்திரமதி, நடுக்காட்டில், நள்ளிருளில் பாழ்மண்டபத்தில் உடுத்தவஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு சொல்லாது சென்ற தன்கணவனைக் காணும்பரியந்தம், அற்ற துகிலுடனும் அழுதொழுகு கண்ணீருடனும் இருந்த தமயந்தி முதலிய ஸ்திரீ இரத்தினங்களின் சரித்திரங்களைப் பெண்கள் படிக்கும்படி செய்து; அவர்களை அந்நெறியில் நடக்கும்படி செய்தலே அவர்களுக்குத் தகுந்த படிப்பாம்.

நம்மிந்து தேசமானது தற்காலத்தில், முற்காலத்துள்ள நளாங்கினி, கோஸலை, சந்திரமதி, தமயந்தி முதலியோரைப்போன்ற ஸ்திரீகளைப் பெறாததகாரணம் நம்பெண்கள் முற்கூறிய ஸ்திரீ மணிகளின் சரித்திரங்களைப் படியாமையே யாம். இதுநிற்க.

"எத்தகைய உபாத்தியாயர்களால் கற்பிப்பது நலம்?" என்பதுபற்றி மிகவும் கவனித்தல் வேண்டும். "கற்பிப்பவரெவ்வண்ணம், கற்பவரவ்வண்ணம்" என்னும் பழமொழிக் கிணங்க, கண்ணாடி நோக்குபவனின் உருவம் அழகு நிறம் முதலிய வற்றைத் தன்னுள் எப்படி பிரதிபிம்பிக்கிறதோ அப்படியே உபாத்தியாயரின் குணங்கள் கற்பவரின் மனமாகிய கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்றன. அவர்கள் கற்பிக்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும் அவர்களை உதாரணமாய் இருத்தல் அத்தியாவசியகமாம். அப்படிப்பட்ட உபாத்தி யாயர்களையே தெரிந்து அவர்களிடத்தில் நம் பெண்களைப் படிப்பிக்க வேண்டும். பெண்களைப் படிப்பிப்பதில் ஸ்திரீகளை தகுந்தவர்கள்.

(வரும்).

N. சுப்பிரமணியஐயர்.

கல்வியறிவுள்ள இந்துக்கள் நீடித்த ஆயுள் பெறுமைக்குக் காரணம்யாது?:— நமதுதேசத்தில் கல்வியறிவுள்ளவர்கள் நீடித்த ஆயுள்பெறாது பெரும்பான்மையாக 50-வயதிலேயே மரணமடைகின்றனர். இதற்குக்காரணம்இன்னதென்றுகண்டுபிடித்தற்பொருட்டு எல்லா வைத்தியசாஸ்திரிகளின் உதவியும் வேண்டப்பட்டிருக்கின்றது. இதற்காக டாக்டர் ஸி. பி. ராமராவ் அவர்கள் தம்மாலியன்ற பொருளுதவி செய்திருக்கின்றனர்.

அற்பவாயுளி லிறந்த கனவான்கள்:- ஆனரபில் வி. கிருஷ்ணசாமி அய்யரும், டீலாங்கும் 48 வயதிலும், பாபு மனமோகன் கோசும் பண்டிட் அஜுடியநாத்தும் 52-வயதிலும், ராய்பகதூர் லாலா லால்சந்து 56 வயதிலும், மகாதேவ கோவிந்தரானடேயும் பாபு காளி சரண்பானர்ஜியும் ஆநந்தமோஹன் போசும் 60-வயதிலும் பரகதியடைந்தார்கள். அந்நிய தேயங்களில் பலர் நீடித்த காலம் இருப்பதற்கும், நம்மவர்க ளவ்வாறிராமைக்கும் காரணம் தேசசாரத்தின் மாறுபாடா யிருத்தல்வேண்டும்.

All rights reserved.

நீதி சதகம்.

(184-வது பக்கத்தின் தொடர்ச்சி)

(7) (மூர்க்கன் மிகவுந் தாழ்வுடைய னென்பதைத் திருஷ்டாந்தவாயிலாக விவரிக்கின்றார்).

நாயானது அளவிறந்த கிருமி (புழுக்)களோடு கூடியதாயும், தன் வாய் நீரினால் நனைந்ததாயும், துர்க்கந்த முடையதாயும், நிந்திக்கத் தக்கதாயும், மாம்ஸமற்றதாயு முள்ள கழுதையின் எலும்பை இது மிகு சுவையுடைய தென்று பிரீதியாக வாயிற் கவ்விக்கொண்டு தனது பக்கத்தில் இந்திரன் வந்திருந்தாலும் அவனைப் பார்த்து வெட்கமடைவதில்லை. அங்ஙனமே நீசஜனனம் (கீழ் மக்கள்) தாங்கிரஹித்த வஸ்துவைத் துச்ச (அற்ப)மாக வெண்ணுவதில்லை. (நிந்திக்கத்தக்க காரியத்தைச் செய்யும் மூர்க்கன் பெரியோர்கள் நிந்திப்பார்களே யென்று பயமடையமாட்டான் என்பது கருத்து).

(8) (இதனுள் அவிவேகம் அனர்த்தமுடையதென்று சொல்லுவதால் விவேகம் ஆவஸ்யகமா மென்பது காட்டப்படுகிறது).

ஸர்வோத்தமமான ஸ்வர்க்க லோகத்தில் வஸிக்கிற கங்காநதி பரமசிவனது சிரஸை அடைந்தாள்; பிறகு அங்கேயிருந்தும் ஹிமோத்பர்வதத்தையடைந்தாள்; அத்யுந்நதமான அப்பர்வதத்தினின்றும் புறம் போந்து பூமியை யடைந்தாள்; அங்கிருந்தும் புறம் போந்து ஸமுத்திரத்தை யடைந்தாள்; பிறகு அத்தகைய இந்தக் கங்கை அற்ப ஸ்தானத்தை யடைந்தாள். அங்ஙனமே விவேக மற்றவர்கட்கும் பல்வகையனவாய பங்கமும் கீழேகீழே விழுதலும் சம்பவிக்கின்றன.

(9) (இதனுள் அக்கினி முதலிய வற்றை நிவிர்த்தித்தல் முடியும்; துராக்கிரஹத்தை யடைந்தமூர்க்கனது சித்தத்தை நிவிர்த்தித்தல் முடியாது என்பது காட்டப்படுகிறது).

அக்னி ஜ்வாலா மாலையோடு பற்றி யெரிந்தால் அதை ஜலத்தால் நிவிர்த்தித்தல் முடியும்; கோடையைக் குளிர்ச்சியால் நிவிர்த்தித்தல் முடியும்; மதம்பிடித்தயானையைக் கூர்மையுள்ள அங்குசத்

தினுல் நிவிர்த்தித்தல் முடியும்; கொழுப்புடைய விருஷபம் கழுதையென்னு மிவற்றைத் தண்டத்தால் நிவிர்த்தித்தல் முடியும்; வியாதியை அநேக ஔஷதங்களால் நிவிர்த்தித்தல் முடியும். உலகத்தில் வியாதி முதலிய எல்லாவற்றிற்கும் ஔஷதம் சாஸ்திரத்திற் கூறப்பட் டிருக்கிறது. மூடனுக்கு மாத்திரம் ஔஷதம் (கூறப்பட்டிருக்க) இல்லை.

வித்வத் பத்ததி.

(10) வியாகரணுதி சாஸ்திர வாயிலாகச் சுத்தமான சப்தங்களால் சுந்தரமான வாக்யங்களை யுடையவரும் சிஷ்யர்களுக்குச் சாஸ்திரத்தை யுபதேசிப்பதால் பிரஸித்தர்களுமாய கவிகள் எந்த வரசனது தேசத்தில் நிர்த்தனர்(ஏழை)களாக வஸிக்கிறார்களோ(அவ்வாறு வசிப்பதா லுண்டாகும்) அந்தத் தோஷம் அந்த அரசனுக்கேயாம். ஆனுல் வித்வான்களோ தனமின்றியும் ஈப்வரர்களாவர். ரத்ன பரீக்ஷை யில்லாதவர்கள் அதன்விலையைக் குறைத்துப் பார்த்தாலும் அந்த ரத்னம் நிந்திக்கத் தக்கதாகுமோ?

(11) வித்தையாகிய தனமானது சோரனுக்கு விஷயமாவதில்லை; அநிர்வசநீயமான ஸுகத்தை விருத்தி பண்ணுகிறது; யாசகர்களுக்காக்கும் பொருட்டு எப்பொழுதும் கொடுத்தாலும் அது மிகவும் விருத்தி யடைகிறது. பிரளய காலத்திலும் அந்தத் தனம் நாசமடைவதில்லை. ஓ அரசர்களே! எவர்களுக்கு அந்தத் தனம் இருக்கிறதோ அவர்களைக் குறித்துக் கோபித்துக் கொள்ளாதேயுங்கள். அவர்களோடு யார் விரோதத்தை யடைவர்?

(12) ஓராஜாவே! ஸகல தத்வார்த்தங்களையு மறிந்த பண்டிதர்களை யவமானம் பண்ணுதே; தருணம் போல் ஸாரமற்ற உன்னுடைய ஸம்பத்தானது பண்டிதர்களைச் சிறிதும் தடைசெய்ய மாட்டாது. (அதில் திருஷ்டாந்தங்காட்டப்படுகின்றது). புதிதாய் உண்டானமதஜலத்தினுல் கறுத்த கன்னத்தையுடைய யானைகளுக்குத் தாமரைத்தண்டின் நூல் இடையூறுக மாட்டாது.

(வரும்).

விஷ்ணுபுரம்-இராமச்சந்திர சாஸ்திரி.

வல்லாள மகாராஜன் சரித்திரம்.

பரமபதியின் சிருஷ்டியுள் அடங்கிய அநேக கோடி யண்டங்களுளொன்றாகிய இப்பிருதிவி யண்டத்தின் பரதகண்டத்தில் ஜம்புத்தீவின் தென்பாகத்தில்நடுநாட்டில் தென்பெண்ணையின்வடகரையில் ஒருநகரமுண்டு. அந்நகரம் ஒன்னலருள்ள மஞ்சு மகழியாலும் விண்ணளாவு மதிலாலுஞ் சூழப்பெற்றுள்ளது; உணவாகக்கூடிய பண்டங்கள் உண்டாதற்கு மிக்க ஆவசியகமானதும் உணவுடனும் தனிமையாகவும் வேண்டப்படுவதும் பிதுர்க்காரியஞ் செய்விக்கச் சரீரத்தூய்மை பெற்றதுமாய் நிற்கும்; நீருக்குக் காரணமாகும் மாரிபொய்யாது பெய்வதால் நீர்வளப்ப முள்ளதாய் ஜீவர்களுக்குப் பற்பல பயன் தருவதும் தான் அடைந்துள்ள மாளிகைகளை அலங்காரமாக்குவிக்கும் வாழை, மா, பலாமுதலிய மதுரக்கனிச் சோலைகளும் தென்னை, கமுகு, கரும்பு முதலிய சோலைக்கூட்டஞ்சூழப்பெற்றதும் ஆங்காங்குத்தாமரைத் தடாகங்களும் அல்லி நீலமுதலியமலர்நிறைந்த ஓடைகளும் பலவுள்ளதாயும், செந்நெற்கதிர்க்குலை செருக்க ளெங்குஞ்சூழப் பெற்றதும் பகலவனது வெப்பந்தணிக்கும் அசோகு குருக்கத்தி சண்பகம் பாதிரி முதலிய தருக்களாற் பொலிவு பெற்றதுமாய்ப் படைச்சங்கமாய்ப் பார்வையிற்றானே பகைவர்க்குக் கடிபயம் விளைவிக்கும்; கரிக்கூட்டம் மனோவேக மனையவாய்விண்ணிற்றாவும் அசுவபந்திகள் ஆகாயமளாவும் அழகிய தேர்வரிசைகள் மெய்யில் தைத்த வேலையும் அம்பையும் பிடுங்கிப் பகைவர் மீது எறிய வீரங்கொண்டுள்ள காலாட்களோடு நாற்புறமும் அகழிபோன்று சுற்றியிருக்குஞ்சேனைஸ்தானஞ் சூழப்பட்டுமிருக்கும்; தனமொன்றே நோக்குந்தாசிகுலத்துதித்துத்தர்மந்தவறாதியங்குந்தருணியர் வீதிகளும், வருவிருந்தோம்பி மனையறந்தவறாதியற்றும் பின்னோர்வாழும் வீதிகளும் பொருள்களைவிருத்தியாக்கப் பிறபொருள் கலப்பின்றிச் சரியான விலைக்கு அளவாக விற்றும் வாங்கியும் வாணிபம்புரியும் சிரேட்டியரென்றழையப்படும் வைசியவீதிகளும் மநுநூற்படி மகிதலமாளுமன்னவர்வாழும் மஹாமறுகும் அறுதொழில் புரியு மருமறை நாவினர்வாழும் அழகியவீதிகளும் அணியணியாயமையப்பெற்றும், மன்னவர் வாழும் மகாமண்டபம் குடிகள் குறைதீர்க்குஞ் ஞாயமண்டபம் ராஜாங்க வரவு செலவிருப்பாதி சோதிக்குங்கணக்கறிமண்டபம் கணிகையர் நடம்புரியுங் கலியாண மண்டபம் அந்தணர் போற்றும் வேதபாராயண மண்டபம் அரசு தொழில் முற்றியவர் வேலை முடித்த பின்னர் அன்பாய்ச்சிறிதுபொழுது போக்குங்காட்சி மண்டபம் ஆத்மார்த்தகடவுளைப் பூசிக்க அரசன் தன்னரண்மனைக் கணித்தாயமைத்த தேவாசிரியமண்டபம் தனுர்வேத பண்டிதர் ஜோதிட பண்டிதர் முதலியோர் வசிக்கும்மண்டபம் ஆயுதச்சாலை கல்விச்சாலை குருடர் செவிடர் மூடவர் ஊமையர் ஆதரவற்றோர்க் கன்னமிடுஞ் சாலைமுதலிய மண்டபச் சாலைகள் நிரம்பப் பெற்றும் விளங்கும். அது கருத்தோடு கருமம்முடிக்குங் காரணத்தால் தேவ நகரமெனவும், காமக் குரோத மதமாத்சரிய மாதித்தீக்குணங்கள் சற்று [illegible]

மாசிலாமணியனைய சுத்தசித்தமுடையோர்வசிப்பதால் பிரமநகரமெனவும் முதிக்கத்தக்கமாணிக்கங்களாலமைக்கப் பெற்ற மாடங்கள் கூடகோபுரங்கள் காந்தியாய்ப்பொலிவதால் தெய்வ நகரமெனவும், தன்னை அடைந்தவர்க்கு மாசுநீக்கி ஞானமளிப்பதால் மோட்சநகரமெனவும்,அமலனு மம்மையு மகமகிழவாழ்வதாற்சிவலோகமெனவும்சிறப்புடையபலகாரணப்பேருடையதாம். இத்திருப்பதியையே ஆன்றோர் திருவண்ணாமலை யென்பர். இந்நகர்க்குள் அமலனழல் வடிவாய் விளங்குங் கிரியொன்றுளது. இதனை அவர் அருணசல மெனமொழிவர். இம்மகாகிரிப் புறங்களில் மந்தாரங் கச்சேலம் வாகை வேங்கை தேக்கு சந்தனமுதலிய தருக்கள்நிறைந்திருக்கும்.வேங்கை அத்தி உழை கரடி யரவமுதலியன கூட்டங் கூட்டமாய் உலாவும்; சிறியதோர் உருவங்கொண்டு சிற்பரனொருவாறு அமராது பெரிதென வுருவங் கொண்டவுருவு மலையுருவாய் அம்மலையு மழல்வடிவாயின் என்னே நாம் பூசித்துய்வதென விண்ணவர் விடுங்கண்ணீ ரிம்மலைப் புறங்களில் பற்பல நதியாயோடும். இத்தோற்றம் யானைகளின் கன்னங்களி னின்றோடும் மதஜலப்பெருக்குப் போன்றிருக்கும். அவை மதங்கொண்டு மலைமீதுமோத அதனல் ஒடியுந் தந்தங்களும் அரவங்கள் பிணைந்து கக்குஞ் சிரோரத்தினங்களும் குவியல் குவியலாய் நெருங்கியிருப்பதால் அது மிக்ககாந்தியோடு இரத்தினமிழைத்த பொன்மலைபோல் விளங்கும். நாடுநகரக் கூற்றுகளில் எள்ளளவுங் குறையாதெல்லா வளப்பமுமுள்ளதாய்த்தீராவினைகள் தீர்க்குந் தீர்த்தங்களுள்ளதாய்ப் புண்ணியம் பாலிக்கும் இவ்வசலமுமுள்ள இப்பதியையாளும் பெரும் பேறு பெற்றுள்ள அரசர் பலரிருந்தனர்.

அவர்களில் சிரோரத்தினமாய் விளங்குகின்றோன் வல்லாளனெனும் அண்ணல். இவன் வன்னிகுலத்துதித்தவன் ; மா புகழணி பூண்டோன் ; சொல் மொழி பிறழான் ; அருமறை நீதிதவறுத்தகையன்; அறிவில ரோடிணங்கான் ; குடிகள் குறையை முறையாய்த் தீர்க்குந் தீரன்; நீதியாய்க் கடமை கொள்வன்; தவத்தினர் வரவறிந்தால் தன்னுசனவீத்துப்போ யடிபணிவன், நீறணிந்த நெற்றியின்ரைக் காணின் நெடுந்தூரஞ்சென்று பணிவன;கண்மணிபூண்டோரைக் கண்டால் கடுகப்போய்ப் பணிவன்; அல்லும் பகலு மவனதுள்ளம் அண்ணாமலை யானடியே சிந்திக்கும். அவன் அன்றலர்ந்த பூவனைய வதனத்தோன்; கருணைமிக்க கண்ணன்;விற்றழும் பேயணியாயமைந்த தோளான்; குறிப்பறிந்தீயுங் கையோன்; வேந்தர் வணங்கும்போதவர் முடிதாக்கிச்சிவக்குந்தாளோன்; கடனீர் முகந்து கார்மேகம் பூதலத்திற்கே பொழிவபோல் குடிகள் பங்குகொண்டு குவலயத்திற்கே யுதவிசெய்வான். இத்தகைய சீரிய குணங்கொண் டுள்ள அவ்வள்ளாள அரசனுக்கு உத்தம யமைச்சர்பலருண்டு அவர்பெருமைசெப்புதல் முடியாது. அவ்வமைச்சர் பின் வருவனவற்றை முன்னர் அறியுந்திறத்தினர் ; வம்சமுன்றயா யமைச்சர் உத்தியோகத்தில் வந்தவர், இடங்கால வலிமை முதலிய வற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலுடையார்; அரசனுக்கு நல்லனகூறி தீயன விலக்குவதாற் குருவனையராவர்;

அரசுக்கல்லலெங்கு தாக்குறுமோ வென வஞ்சி அருமுயற்சி செய் தருகே
யிருப்பதாற் றாயனைய ராவர்; ஒன்னலர் திறமறிவித்து அவர் தோற்றோடு
ம்படிக்கும் தங்கள் வல்லாள வள்ளலுக்கு ஜயங் கூடும்படிக்கும் அமர்செ
ய்து அவர்நாடுபறித்து அவற்றிற்கும் இவனைப் பதியாக்கித் தாங்கள் வாடா
மகிழ்வெய்துவிப்பதால் தாதையனைய ராவர். இத்தகைய சிறப்பு பல நிறை
யப் பெற்றுள்ள அரசனுக்குப் பல குணங்களும் நிறையப்பெற்றுள்ள
இரண்டரும் துணைவியருண்டு. அப்பாவையர் தமதிறைவன் மகிழ்ந்தா
ல் தாமகிழ் வெய்வர்; அவர் துன்புறின் தாமும் துன்புறுவர்; நாயகனே
தெய்வமென நாளும் போற்றி வழிபடுபர், நாயக னுபயசரணங்களை யுள்ளத்
தே சதா துதித்து வருவர்.

இத்தகைய பத்தினிமாரோடும் பாங்கானவமைச் சரோடும் சகல
வளமும் நிறையப்பெற்று வேதநூற்படி எங்கும் மிக புகழ்பெற்று
விளங்கிப் பூமியை யரசாண்டுவந்தான். பாபத்தொழில் புரியக்
கனவிலும்நினையாக்குடிகளையொருகுறையுமிலாதாண்டயிவ்வரசனுக்குப் பெ
ருங்குறையொன்றிருந்தது. அதுமகப்பேறிலை யென்பதேயாம், அது நாளு
க்கு நாள் அபிவிர்த்தியாகி அவ்வண்ணலின் மனதைத் துயருறச் செய்தது.
இதனால் நீங்கா ; வாட்டமடையத்தலைப்பட்டான்; அன்னு மலையானையறு
தினமுமனங்கசிந்துருகத் துதிப்பான். இத்துயர்பற்றித் துணைவரோடுரைப்
பன், அவர்களும் இதனால் விளைந்த அவரவர்மனத்துய ருறுவதல்லாது மன்
னன்படுந்துயரம் மனஞ்சகிக்கப் பொறுதவராகிநலுவர். நம்மால் ஆவன எது
வாயினும் நம்மிறைவன் . முகக்குறிப்பறிந்து செய்யலாம்; நம்மாலியலாத
இப்பெருங்குறைக்குஉண்ணுமுலையாளலது யாம் யாதும் செய்ய வல்லமை
யுடையோமா? எனதயர் கொள்வர். அமைச்சாரதியரெவரும் பொது நோக்
கோடு அரசுபுரியும் அரசனுக்கோர் புதல்வனின்றேல்நம்மிறைவனுக்குப்பின்
னிம் மகிதலம் யாவரோ ஆள்பவர்? அவர்கோல் செங்கோலாமோ அல்லது
கொடுங்கோலாமோ கண்டிலம் என எவரும் இக்குறையை நினைந்து நினை
ந்து எக்கமுறுவர். குடிகள் குறையாவரோ யறிபவர் எனப்பலவாறு சொல்
லித்துயருறுவர். நம்மரசன் தலயாத்திரை செய்யின் தனயனுண்டாகுமோ?
புண்ணியத்துறைகளில் மூழ்கினுல் புதல்வனுண்டாகுமோ? அல்லது நம்மா
தரசிகள் தக்கவிரதங்கைக்கொண்டால் மகப்பேறுசித்திக்குமோ? மூலிகைக
ளாலாகுமோ? மாந்திரீகத்தால் வாய்க்குமோ? யாது செய்தால் மன்னனுக்
கு மகவுண்டாகுமெனப் பற்பலருரைத்து உசாவுவர். இவ்வாறே அரசனும்
சிந்தித்துச்சிந்தித்து பற்பலவாண்டுகள் கழித்துவந்தான். இப்படிக்காலங்கழி
த்து வருநாளில் ஒரு நாள் அவன் உப்பரிகையின்மீது பூர்ணச்சந்திரனொளி
சாயையும் தென்றல்காற்றையும் அனுபவித்துக்கொண் டிருக்கும்போது
அவன் மனம் பின் வருவனவற்றைக் கருதத் தலைப்பட்டது.

வரும்

ப. மூ. கோகிலாம்பாள் அம்மாள்.

Avarice Punished.

அதிக ஆசை அதிக நஷ்டம்.

ஒரு தொழிற்சாலையில் வேலையாயிருந்தகந்தனென்பவன் ஸ்வபாவமாகவே பேராசையுள்ளவன். அவனுக்குப் பணத்தின்மேல் பித்தம் கங்குக்கரையற்றது. இதுவேயுமன்றிப் பணக்காரர்களைக் கௌரவப்படுத்தும்குணம்அவனிடத்தில் அதிகமாகவே அமைந்திருந்தது. அவனறியாததனவந்தர்கள்ஒருவருமில்லை. எதேனுமொரு கூட்டத்தில் தனவந்தர்களின் பெயரை யாராவது பிரஸ்தாபித்தால், கந்தன் உடனே ஆநந்தத்துடன் எழுந்து "அவனா! நானும் அவனும் உயிருமுடலும்போ லிருப்போம்! அவன் என்னுடைய சமீப பந்து!" என்பான். எழைகளின் பெயரைக்கேட்டாலோ கந்தன் அவர்களை அறியவே அறியான்! அவன் எப்பொழுதுந் தனவந்தர்களின் கூட்டத்தி லிருப்பானே தவிர எழைகளின் கூட்டத்திலிரான். எளியவர்களின் கஷ்ட துக்கங்கள் இப்படிப் பட்டனவென்பது அவனுக்குத் தெரியாது!

கந்தன் அதிக தனவந்தனல்ல; தொழிற் சாலையின் வரும்படியைத் தவிர அவனுக்கு வேறொரு சம்பாத்தியமுமில்லை. இருந்தபோதிலும், அச்சம்பாத்தியம் நிலைபெற்றது. மேலும், தன்கையிலிருந்த செல்வத்தைக் கொண்டு தொழிற் சாலையை விலைக்கு வாங்கிவிட்டான். பாதிவயிற்றிற்குண்டு பணத்தைச்சேகரித்தான். அவன் மனம் எப்பொழுதும் செல்வத்தையே நாடியிருக்கும்; அவனது ஆசைக்கோ அளவில்லை. ஆகவே தனவந்தனாயிருந்த போதிலும் அவன் எழையே!

ஒருநாள் கந்தன் பணத்தாசையினால் எண்ணத்தகாத எண்ணங்களெல்லாம் எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தபொழுது, அண்டை வீட்டுக்காரன் அவனிடம்வந்து "அண்ணா! இராமசுவாமி மூன்றுநாளாய்ப் புதையலகப்படுவதாகக்கனவுகண்டானாம்; நாலாநாள் காலையில் அவன் தன் வீட்டுக்கொல்லையைத்தோண்டினபொழுது புதையலகப்பட்டதாம்;" என்றான். பிறகு கந்தன் பின்வருமாறுயோசித்தான்:-"நான் காலைமுதல்மாலைவரையில் கஷ்டப்பட்டுஉழைத்து சிறிது சம்பாதிக்கின்றேன். இராமசுவாமியோ கனவுகண்டு உட்கார்ந்த இடத்திலேயே புதையலெடுத்து கோடீசுவரனானான். அவனைப் போல் நானும் கனவு காணமாட்டேனா? புதையலகப்படாதா? சந்தோஷமாயிருக்கமாட்டேனா? புதையலகப்பட்டால் எவ்வளவுதந்திரமாய் அதை இரகசியமாக அடக்கிவிடுவேன். ஆ என்ன அதிர்ஷ்டசாலி இராமசுவாமி! மனிதனாகப் பிறந்தால் அவனைப்போலல்லவோ இருக்கவேண்டும். என்னைப்போல் துன்பப்படுகின்றவர்களும் இப்பூவுலகில் உண்டோ?"

இவ்விதமாகக் கந்தன் பரிதபித்துக்கண்ணீர் விட்டான்; பிரதிதினமும் படுக்கும்பொழுது இவ்வெண்ணங்களே அவன்மனதில் குடிகொண்டிருக்கும். ஆகையால், ஒருநாள் அவன் தன் தொழிற்சாலையிலிருக்கும் யந்தரத்தின் கீழ் ஒரு பணக்குவியல் சதுரமான ஒருகல்லினால் மூடப்பட்டிருப்பதாகக் கனவுகண்டான்? அதிகாலையிலெழுந்து கடவுளுக்கு வந்தனம் புரிந்தான்; இன்னும் இரண்டு நாளும் அதேமாதிரிகனவு கண்டான்.

மூன்றுநாள் அதிகாலையில் ஒருவருக்கும் தெரியாமல் தொழிற்சாலைக்குப் போய் யந்திரத்தின் கீழ்த்தோண்ட ஆரம்பித்தான். வெகுநாழி தோண்டினபிறகு கனவில் கண்டகல்போல் ஒன்று காணப்பட்டது. அது மிகவும் பெரிதான கல்லானதால் அவனால் அதைப் பெயர்க்கக்கூடவில்லை. ஆகவே, உடனே வரம்புகடந்த சந்தோஷத்துடனும் ஆவலுடனும் வீட்டிற்கு ஓடி மனைவியிடம் இவ்வாச்சரியசம்பவத்தைப் புகன்றனன். அது கேட்ட மனைவியின் சந்தோஷத்திற்கோ அளவில்லை; ஒன்றும் தெரியாமல் கீழ் வீழ்ந்தாள், எழுந்தாள், சிரித்துக் கூத்தாடினாள், கணவனைக்கட்டிக்கொண்டாள். பிறகு ஒருவாறு தெளிந்து கல்லைப்பெயர்த்து பொருளை எடுத்துக்கொள்ளக் கணவனுடன் தொழிற் சாலைக்குச் சென்றனள். அந்தோ! அங்கே அவர்கள் கண்ட காட்சியை என்னென்று சொல்லலாம். அவ்விருவரின் துக்கத்தை எவ்வாறு எடுத்துரைக்கலாம். பணக்குவியலைக் காண்பதற்குப் பதிலாக ஜீவனத்திற்கு ஆதாரவாயிருந்த யந்திரம் இடிந்து பொடிப் பொடியா யிருந்ததைக்கண்டு பரிதபித்தார்கள்.

R. சங்கரன்.

பண்டிதர் மருமகள்.

திருவாரூரில் வசித்துவந்த சோமநாத சாஸ்திரி யென்பவர் தம்முடைய குமாரத்தியைத் திருத்துறைப் பூண்டித் தியாகராஜ தீக்ஷிதர் குமாரனுக்குக் கல்யாணஞ்செய்து கொடுத்தார். சாரதா என்னும் அந்தச்சிறுபெண் புத்தியறிந்து ருதுசாந்திமுகூர்த்தம் நடந்த பிறகு, மாமியார்வீட்டுக்குப் போய்க் குடித்தனஞ்செய்து வந்தாள். செய்துவருங்காலத்தில், ஒருநாள் இராத்திரிதன்வீட்டிற்கு வந்திருந்த விருந்தினர்க்கும் மாமனார் முதலியவர்களுக்கும் அன்னம் பரிமாறிக்கொண்டிருந்தாள். அப்பொழுது விருந்தாளியாக வந்து போஜனஞ் செய்துகொண்டிருந்த உறவினனொருவன் மோரன்னத்திற்கு உப்புக்குறைவா யிருந்ததினால் உப்புக்கேட்கவேண்டியவனானான். பிராமணர்கள் சாதாரணமாக இராத்திரி வேளைகளில் உப்பு என்னும் பெயரை உச்சரிக்க மாட்டார்களாகையால், சாரதா வீட்டிற்கு வந்த அந்த விருந்தினன் 'பொண்ணே! கொஞ்சம் லவணம் கொண்டுவந்து பரிமாறடி" என்றுகேட்டனன். அந்தச் சுந்தரி பரபரப்பாய்ப் போனாள்; அவளை நோக்கி மாமனாரகிய தியாகராஜ தீட்சிதர் "லவணமென்றால் என்ன தெரியுமாடி அம்மா மாட்டுப்பெண்ணே" என்றுகேட்டார். அப்பொழுது

மருமகள் "ஆஹா நன்னுயிருக்கு! சாஸ்திரிகளவாள் ஆத்திலே பெண்ணுய்ப் பிறந்து, பண்டிதர் ஆத்திலே வாழ்க்கைப்பட்டு லவணம் என்ருல் என்னவோ தெரியாமற் போகுமா? இது ஒரு கௌரவமா?" என்று சொல்லிக் கொண்டே போய்ப் பசுவின் சாணத்தைக்கொண்டுவந்து இலேயிற் பரிமாறினுள். இவள் புத்திசாலித்தனதிற்கு மெச்சி மாமனுர், சாஸ்திரிகள் குமாரத்தி பேரறிவுடையாளாதலால் தன்னியனேயானேன் என்று கூற அனைவரும் வயிறுகிழியச் சிரித்தார்கள். இதனுல் சந்தர்ப்ப மறியாதவர்களால் சங்கடம் பலவுண்டாமென்பது நன்கு விளங்கும்.

முத்தியாம்பாள்,
சூளை, சென்னை.

ஒரு ரூபாய்க்கு இரட்டைச் செருப்படி.

அநியாய புரத்தில் வசித்துவந்த பாதகபாதூர் என்னும் ஒரு துலுக்கன் ஒருவர்த்தகன் கடைக்குப்போய்த்தனக்குஅரிசிஅரை ரூபாய்க்குக்கொடுக்கும்படி கேட்டான். வர்த்தகன் இதோகொடுத்தேன் கொஞ்சம்பொறு என்று, துலுக்கனுக்குமுன்வந்திருந்தஒரு பிராமணனுடைய கணக்கைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவ்வளவு தாமதப்பட்டதற்கு ஆத்திரக்காரனுகிய அந்தத் துலுக்கன் சகியாமல் துரிதப்பட்டு "ஏண்டா கழுதைக் காமாட்டி! எத்தனை நேரமவன் கணக்குப் பாத்துக்கினு இருக்கேய" என்று வாய்க்கு வந்தபடி பேசிக் காலிலிருந்த செருப்பைக் கழற்றிக் கையில் எடுத்து ஒரு அடி அடித்தான். வர்த்தகன் பொறுமை யுள்ளவனும் சண்டை சச்சரவு முதலிய வழக்குகளுக்குச் செலவு செய்யாது கெட்டித்தனமா யிருப்பவனுமாதலால், சாந்தமாயிருந்துவிட்டான். ஆனுலுமவன் பிராமணனுடைய தூண்டுகோலினுல் நியாயாதிபதியி னிடத்துச் சென்று சாயபுவின் மேல்பிரியாது செய்தான். நியாயாதிபதி துலுக்கனை வரவழைத்து விமரிசையாய் விசாரித்தபோது அவன்க்க "ஙாம்போ அவசரமபோவுனுன்ராங்கோ; அதிக்கி இவன் சொம்மா காக்கப்போட்டான், அதிக்கிதல மேலே வன்னு அடித்தான்; மகாராஜ நம்பளிக்கி அடிச்சாங்கோ இந்தச் சட்டிக்கி சாமி" என்று கூறினுன்.

நியாயாதிபதி துலுக்கனுக்கு அரைரூபாய் அபதாரம் விதித்து, அதை வர்த்தகனுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். சாயபு தன்னுடைய சொக்காய்ஜேபியில் கையிட்டுத்தேடிப் பரபரப்புடன் சென்று நியாயசபையோர் முன்னிலையில் வர்த்தகனைத் தன்னுடைய கைவலுவெல்லாம் சேர்த்து ஓங்கி இன்னும் ஒரு தடவை செருப்பால் புடைத்து ஒரு ரூபாய் எடுத்து அவன் கையில்கொடுத்தான். அப்படியேன் அடித்தாய் என்று நியாயாதிபதி கேட்க, அதற்குத் துலுக்கன் "என்பையிலே அல்லாம் ரூபாயே இருக்குருங்கோசாமி! சில்றே இல்லிங்கோ ஐபா! நீங்கோ சொன்ன மாதிரிதான் ஒரு அடி அடிச்சதுக்கு அரைரூபான்னு, ஒருரூபாக்கு இன்னம் ஒரு அடி குடுத்தாங்கோ மாராஜ்; நீங்கோதான் கணக்கு பாரிங்கோ சாமி, என்று செருப்படியொன்றுக்குக் கிரயம் அரை ரூபாய் விழுக்காடு தன்னிடமிருந்த ஒரு ரூபாயில் மற்ற அரை ரூபாய்க்கும் மற்றோரடியும் அடித்ததாகச்சொல்லிநியாயஸ்தலத்தினின்றும் விலகப்பார்த்தான். நியாயாதிபதி அந்தத் துலுக்கனுடைய மடைபத்தனத்தைக் கண்டு வெறுத்து, அவனுக்கு 100 சவுக்கடி தரும்படி உத்திரவு செய்தார். துலுக்கனுடைய தலைகொழுத்த தனத்தைக் கண்டு அங்கிருந்தார் யாவரும் வயிறு வீங்கச்சிரித்தனர். இதனால் ஆத்திரக்காரனுக்கு ஆபத்துத் தடையில்லா துண்டாகுமென்ப தினிது விளங்கும்.

S. K. சச்சிதாநந்தம்.

வர்த்தமானம்.

சிருங்ககிரி மடாலய குரு நியமனம்:—ஏப்பிரல்மீ 7-ந் தேதி சிருங்ககிரி மடாலயத்தில் நரசிம்ஹ சாஸ்திரி யென்னும் ஒரு மாகாத்மா மைசூர்க் கவர்ன்மெண்டாரால் குருவாக நியமிக்கப்பட்டனர். இவர்க்கிப்போது வயது 19. இவர் சம்ஸ்கிருதத்திற் சிறந்த பண்டிதரென்றும், வைதிகவொழுக்கத்திற் சிறிதுந் தவறாதவரென்றும் சொல்லப்படுகின்றார். இவரது தாய் தந்தையர் ஜீவித்திருக்கின்றார்கள்.

கலியாணமாகாதவர்கட்கு வரி:—பிரான்ஸ் தேசத்திலும் ஜர்மனி தேசத்திலும் கலியாண மாகாதவர்கட்கு ஜனவிருத்தியை யுத்தேசித்து வரியொன்று விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆஸ்டிரியா தேசத்தாரு மிவ்வாறு செய்ய வுத்தேசித் திருக்கின்றனராம்.

வசீகர விவாக வழக்கு:—அமேரிக்காவில் மாக்நேட்கவுட்டெனுமொரு சீமாட்டி தன்னை யொருவன் வசீகரவித்தையால் மயக்கி விவாகஞ் செய்து கொண்டானென்றும், அம்மயக்கம் சிலகாலம் பொறுத்துத் தெளிந்ததென்றும், அவன் செய்துகொண்ட விவாகம் செல்லத்தக்கதன்றென்றும், கோர்ட்டில் வியாஜ்ஜியந்தொடுத் திருக்கின்றாள்.

செப்புப்பாத்திரத்தி னுபயோகம்:—சீனர்கள் எவ்வளவு கேவலமான விடத்தில் வசித்தாலும் அவர்களைக் காலரா முதலிய வியாதிகள ணுகுவதில்லை; அதற்குக்காரணம் அவர்களெப்போதும் ஜலத்தைச் செப்புப் பாத்திரத்தில்வைத் துபயோகிப்பதேயாம். செப்புப் பாத்திரம் தன்னிடத்தூற்றிய ஜலத்திலுள்ள விஷக்கிருமிகளைக் கொல்லும் சக்தியுடையதாம்.

தனது நாயகனுருவத்தை நகத்தி லெழுதிக் கோண்ட வோரு நங்கை:— ஜர்மன் சக்ரவர்த்தியவர்களின் பந்துக்களிலொருஸ்திரீ தனது நாயகருடைய வுருவத்தைத் தனதுநகத்தின்மீது ஒரு சித்திரமெழுதுவோனைக் கொண்டெழுதச்செய்து, அவனுக்கு 180ரூபாய் கொடுத்தனள். அதையறிந்த அங்குள்ள ஸ்திரீகளும் அவ்வாறே தங்கள்நகங்களில் தமது நாயகரினுருவத்தை யெழுதுவித்துக் கொள்ளுகிறார்களாம். நமது தேசத்து ராஜஸ்திரீகள் தமது நாயகரது வடிவத்தைத் தமது ஸ்தனங்களின்மீது சந்தனக்குழம்பால் தோழிகளைக்கொண் டெழுதிக்கொள்வது பிராசீனவழக்கமாம்.

குழந்தையின் கண்ணில் மிளகுமையிட்டுச் சிட்சை யடைந்தவள்:— கென்ட் என்னு மூரில் வில்லியம் என்பவள் ஒரு சிறு பெண்குழந்தையின் கண்ணில் மிளகுமையிட்ட குற்றம்பற்றி 6 மாதங் கடுங்காவற் றண்டனையடைந்தாள்.

நீர்மீதுநடத்தற்குரிய பாதரட்சை:—ஜர்மானிய ரொருவர் நீர்மீது நடந்து செல்லுவதற்குரிய பாதரட்சை யொன்றைக் கண்டுபிடித் திருக்கின்றனர்.

ஒரு பெண்பாடசாலை:—மேரிசக்ரவர்த்தினியார் டில்லிக்கு விஜயஞ் செய்ததன் ஞாபகார்த்தமாக ஆண்டு ஒரு பெண்பாடசாலை ஸ்தாபிக்கப் போபால் பீகம் முயர்சிசெய்து வருகின்றனர். அப்பாடசாலைக்கு 12 லட்சம் ரூபாய் வேண்டுமாம். இதற்காகப் போபால் பீகம் சமஸ்தானத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாயும், தமது சொந்தப்பணத்திலிருந்து 20,000 ரூபாபாயும் அவரது முதலிரண்டு மருமக்கள்மார்களொவ்வொருவரும் 7000 ரூபாயும், மூன்றுவது மருமகள் 5000 ரூபாயும் கொடுப்பதாகக் கூறியிருக்கின்றனர். ஒரு குடும்பத்திலிருக்கும் ஸ்திரீகளெல்லாம் தர்மசிந்தை யுள்ளவர்களாக விருப்பது பெரும் புண்ணியமேயாம்.

ஊறுகாய், குழம்புகளின் ஏற்றுமதி.—ஒவ்வொரு வருஷமும் லண்டன் நகரிலிருந்து பிறதேசங்களுக்கு 13 லட்சம் பவுண்டு மதிப்புடைய ஊறுகாய்களும் குழம்புகளும் ஏற்றுமதிசெய்யப்படுகின்றனவாம்.

ஐரோப்பிய அரசர்களும் அவர்கள் உணவும்:—ஐரோப்பிய அரசர்களுள் இரண்டொருவர்தவிர மற்றவர்களெல்லாம் 50 வயதிற்குள்ளேயே இறந்துவருகிறார்களாம். இதற்குக் காரணம் அவர்கள் ஓயாது உண்ணுவதே யொழிய மற்றபடி ராஜ்யத்திற்கு உழைப்பதல்ல என்றுபலசோதனைகளோடு டாக்டர் லீகிராண்டு அபிப்பிராயப்படுகிறார்.

ஐரோப்பாவில் ஒவ்வொரு தேச அரசரும் தினம் ஒன்றுக்கு 7 வீசை அல்லது 8 வீசை ஒரே மாதிரியான விசேஷ உணவுகளைப் புசிக்கின்றார்களாம். இதனால் அவர்கள்சரீரம்கெட்டுப்போகின்றதென்றும்சொல்லுகிறார்;

கடல்நீரில் பொன்:-நியூயார்க்கில் வசிக்கும் ஆஸ்டிரியா தேசத்து ரசாயன சாஸ்திரியான டாக்டர் ஆஸ்கார் மாகெல் என்பவர் 48, 4000 பவுண்டு செலவு செய்து யந்திரங்களமைத்தால் வருடத்திற்கு 260,000 பவுண்டு மதிப்புள்ள பொன் கடல் நீரினின்றும் எடுத்தல் கூடுமென்று கூறுகின்றனர்; இவர் தினமொன்றற்கு 60 பவுண்டு செலவுசெய்தால் 720 பவுண்டு மதிப்புள்ள பொன் எடுத்தல்கூடுமென்றும், அங்ஙனஞ்செய்வதால் தினமொன்றற்கு 660 பவுண்டு லாபங்கிடைக்குமென்றுங் கூறுகின்றார்.

மேலும், 3000 பவுண்டு கடல்நீரில் ஒரு பவுண்டு பொட்டாஷும், 2,50,000 காலன் கடல்நீரில் 12 ஷில்லிங் மதிப்புள்ள பொன்னுமிருக்கின்றன வென்றும் டாக்டர் மாகெல் கூறுகின்றார். இவர் கூறுவதுபோல் கோடீசுவரர்கள் முன்வந்து தமது பொருளைச் செலவிடுவார்களாயின், பெரியலாபங் கிடைக்கும்.

புலி ரயிலிலகப்பட்டுக் கொண்டது:—கயாவிற்கருகே போய்க்கொண்டிருந்த ஒரு ரயில் வண்டியின் இஞ்சின் முகப்பில் ஒரு சிறுத்தைப்புலி அகப்பட்டுக் கொண்டது. புலியைச்சுட்டும் பயன்படாமற் போயிற்று.

ரயில் 30 மைல் சென்றபிறகு, புலி விடுபட்டோடியது. ஆண்டிருந்த இன்ஸ்பெக்டர் அதனைச் சுட்டுக் கொன்றனர்.

பனிக்கட்டி மழை:—பீகார், பாகல் பூரைச்சார்ந்த சூல்டான் கஞ்சில் உக்ரமான பனிக்கட்டிமழை பெய்தது; இரண்டுஇஞ்சு மழையும்பெய்தது, அதனால் அவ்வூரைச்சுற்றி நான்குமைல் தூரம்வரைக்கும் பனிக்கட்டி மயமாயிருந்தது. விடாமழை பெய்தும் பனிக்கட்டி 24 மணிநேரம் கரையாமலே யிருந்தது. அதுகாரணமாக நெற்பயிர்கள் சேதமாயின; கால்நடைகள் ஆயிரக்கணக்காக இறந்தொழிந்தன; குளங்களிலுள்ள மீன்கள் உறைபனியால் உயிர் துறந்தன.

புதுவகையான ரோட்:—பர்மிங்ஹாம் நகரத்தில்தோல்துண்டுகளைக் கிலோடுசேர்த்து ரோட்டுபோடப்பட்டிருக்கின்றது. அஃது உறுதியாகவும் குதிரைகளின் கால்களுக்கு மிருதுவாகவு மிருக்கின்றதாம்; அதிலிருந்து மிகுதியாகத் தூசு கிளம்புவ தில்லையாம்.

ஒரு பெரியதிருட்டு:—லண்டன், ரீஜெண்டு வீதியிலுள்ள ஒரு நகை வியாபாரியின் ஷாப்பில் திருடர்கள் பிரவேசித்து 10,000 பவுண்டு மதிப்புள்ள நகைகளைக் கொள்ளைகொண்டு போயினர். திருடர்கள் ஷெ ஷாப்பிற் கருகே ஓர் ஒட்டல் வைத்து, அங்கிருந்து இரண்டடி கனமுள்ள மூன்று சுவர்களைத் துளைத்துச் சுரங்கஞ்செய்து ஷாப்பிலிருந்த நகைகளைத் திருடிப்போயினர்.

குஷ்டரோகிகளின் ஆஸ்பத்திரி:—பெல்காமில் ஒரேகாலத்தில் ￼90 குஷ்டரோகிகள் தங்கி வைத்தியஞ்செய்து கொள்ளுதற்குரியதாக ஆஸ்பத்திரியொன்று கட்டப்படுமென்று தெரிகின்றது.

விலையுயர்ந்த ரத்தினம்;—ஸ்ரீ-பத்திராசலம் ஜமீன்தாரிடத்து 49-காரெட் நிறையுடையதும் நீர்க்கட்டால் மேன்மையுடையதுமான ஓரிரத்தின மிருக்கின்றதாம். அது 19500 ரூபாய் மதிப்புடையதாம்.

ஒரு ஞாபகார்த்த மணிக்கூடு:—மதுரையிலுள்ள விக்டோரியா எட்வர்ட் மிமோரியல் டவுன்ஹாலில் நமது சக்ரவர்த்தியார் இந்தியாவிற்கு விஜயஞ் செய்ததன் ஞாபகார்த்தமாக அங்குள்ளார் ஒரு மணிக்கூடு கட்டவுத்தேசித்திருக்கிறார்களென்று தெரிகின்றது.

பெண்கல்வி யபிமானம்:—சூரத்திலுள்ள நகர்பலியா என்னுமூரில் இரண்டிந்து விதவைகள் 5000-ரூபாய் மூலதனம் வைத்து நிதாராஸ்ரம் என்று ஒரு பெண் பாட்சாலை ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

மான்செஸ்டரின் துணிவியாபாரம்:—1911 வருடம் நவம்பர் மாதத்துடன் முடிவான 11 மாதத்தில், மான்செஸ்டரி லிருந்து இந்தியாவிற்கு 2132000000 கெஜம், சைனாவிற்கு 608, 000, 000 கெஜம், துருக்கிக்கு 465,000, 000 கெஜம், ஈஜிப்டிற்கு 304, 000, 000 கெஜம் துணிகள் ஏற்றுமதியா யிருக்கின்றன.

இந்தியாவிற்கு ஏற்றுமதியாகியிருக்கும் துணி ஏனைய தேசங்களுக்கு ஏற்றுமதியாகியிருக்குந்துணியிலும் அதிகமாயிருக்கின்றது.

அதிசயமான கோழிக்குஞ்சுகள்:—மதுரைப்பாக்கத்தில்பலகாரம்விற்கும் துரைசாமியென்பவன் வளர்க்கும் பெட்டைக்கோழியொன்று முட்டைகளிட்டுக் குஞ்சுகள் பொரித்தன. அக்குஞ்சுகளுள் சிலவற்றிற்குக் கால்களில்லை; சில ஒற்றைக்காலுடையனவாம்.

ஜப்பான் மாணவர்கள்:—1911 ம் வருடம் மார்ச்சுமாதக் கடைசியில் ஜப்பான் கல்வியிலாக்காவால் கல்விகற்கப் பிறதேசங்கட் கனுப்பப்பட்ட மாணவர்களின்தொகை 124 ஆம். அவர்கள் இங்கிலாண்டு, ஜர்மனி, பிரான்சு, அமெரிக்கா, ஆஸ்டிரியா, ஹங்கரி, சைனு, இத்தாலி, பெல்ஜியம், ஹாலண்டு, சுவீடன் என்னும் தேசங்கட்குச் சென்று 96 விஷயங்களைக்கற்று வருகின்றனர்.

இங்ஙனம் இந்துக்களும் பிறதேசங்கட்குச்சென்று ஆங்காங்குத் தேர்ச்சியடைந்துள்ள விஷயங்களைக் கற்க முயன்றாலன்றோ நம்முடைய தேசம் மேல்நிலைமைக்கு வருதல் கூடும்.

சுக்குவியாபாரம்:—ஜப்பானுக்கு இதுகாறும் ஏற்றுமதியாகிவந்த சுக்கு வியாபாரம் குறைந்துபோயிற்று. இதற்குக்காரணம் சாயம்போடுவதற்குக் சுச்கு உபயோகிப்பதை விட்டுவிட்டமையேயாம்.

குருடர்களின் பெருக்கமும் சுருக்கமும்:—நார்வே, ஸ்வீடன், அயர்லாந்து முதலிய தேசங்களிலுள்ள குருடர்களுள் பெண்களின் தொகையே மிகுதியாம்; ஆனால், ஐரோப்பாவின் ஏனைய தேசங்களிலும் அமெரிக்காவின் ஐக்கியமாகாணங்களிலும் உள்ள குருடர்களுள் புருஷர்களின் தொகையே மிகுதியாம்.

கிழமணம்:—அமெரிக்காவின் ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்த பீட்ஸ்பர்க் என்னும் நகரில் கோடீசுவரரும் 75 வயதுடையவருமான அல்சாப் என்பவர் அங்குள்ள பெண்களுள் அழகிற்சிறந்தவளும் 19 வயதுடையவளுமான மிஸ் ஹில் என்பவளை விவாகஞ்செய்து கொண்டனர்.

பிராயச்சித்த விவாதம்.—பாலக்காட்டில் ஜெயிலிலிருந்து விடுதலையான பிராமணர்களை ஜாதியில் சேர்த்துக்கொள்ளுதல் கூடுமாவென்பது பற்றிய விவாதம் சிலவருஷங்களாக நடைபெற்றுவருகின்றது. இப்போது விஜயநகரம் மகாராஜா காலேஜ் பண்டிதர் - மகாமகோபாத்தியாயர் - ஸ்ரீ தாதய்ய சுப்பராய சாஸ்திரியாரவர்கள் பிராமணர்கள் ஜெயிலிலிருந்து விடுதலையானால், அவர்களை ஜாதியிற் சேர்த்துக் கொள்ளலாமென்று கூறினர். இதனைப் பலர் அங்கீகரித் திருக்கின்றனர்.

ஆகாயமளாவிய வீடு:—அமெரிக்காவில் 600 அடி உயரமுள்ள வீடொன் றிருக்கின்றது; அதில் 50 அடுக்கு மெத்தைக ளிருக்கின்றனவாம்.

கிறிஸ்துமதசம்பந்தமான செலவு:—பிரிட்டிஷ் இந்தியா முற்றும் 1910-1911 வருஷத்தில் கிறிஸ்தமத சம்பந்த விஷயமாக இந்தியாக்கவர்ன்மெண்டார் செலவிட்டுள்ள தொகை 18,65,000 ஆம்.

ஒரு விசித்திரக்கிளி:—அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் ஒருவர் கிளியொன்று வளர்க்கின்றார்; அது பதங்களி னெழுத்தைக் கூட்டுமாம்; சங்கீதம் பாடுமாம்; சில மிருகங்கள்போன்று சப்தஞ் செய்யுமாம்.

புதையுண்டிருந்த ஒருநகரம்:—சிலவருஷங்கட்கு முன்னர் ரோமாபுரிக்கருகேயுள்ளபாம்பேஎன்னும் நகரம் விஸ்சூவியஸ் என்னும் எரிமலையினின்றும் பெருகிய கற்குழம்பாற்றால் மூடப்பட்டுப் போயது. அஃதிப்போது தோண்டியெடுக்கப் படுகின்றது. அங்கு விசித்திரமான கட்டடங்களும் விகாரமான பிரேதங்களும் காணப்படுகின்றன.

இரண்டுமாதமாகத் தூங்கும் ஒரு ஸ்திரீ:—ஐரோப்பாக் கண்டத்துள்ள ஸாக்ஸனி என்னும் இராஜ்ஜியத்திலிருக்கும் ஹெட்டஸ்டட்என்னுமொரு சிறுநகரத்தில் 18 வயதுள்ள ஒரு ஸ்திரீ இரண்டுமாதகாலமாக இடைவிடாது தூங்கி வருகின்றாள். இவளைத் தூக்கத்தினின்று மெழுப்பப் பலவாறாக முயன்றும், அது பயன்படாமற் போயிற்று.

ஒரு மாதரசியின் சிறந்தகுணம்:—மைசூர்த்திவான் ஸர்-பி-என்-கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பத்தினியாருக்கு மைசூர்க் கவர்ன்மெண்டார் ஷை மூர்த்தியவர்கள் திவானுத்தியோகத்தினின்றும் நீங்குவதுபற்றி 35000 ரூபாய் தந்தனர். அத்தொகையினை அவ்வம்மையார் மைசூர் சமஸ்தான சமஸ்கிருதபாஷாபி விருத்தியின் பொருட்டுச் செலவிட வுத்தேசித்திருக்கின்றனர்.

இந்தியாஜனங்களின் நிலைமை:—இப்போ தெடுத்துள்ள ஜனகணிதத்தின்படி இந்தியாவிலுள்ள $31\frac{1}{2}$ கோடி ஜனங்களுள், 1000 க்கு 106 புருஷர்களும், 77 பெண்களும் படித்திருக்கிறார்களென்றும், இலட்சம் பேர்களுள் 26 பேர் பைத்தியக்காரர்களாயும், 64 பேர் செவிடர்களாயும், 142 பேர் குருடர்களாயும், 35 பேர் குஷ்டவியாதியாளர்களாயு மிருக்கின்றார்களென்றும் தெரிகின்றன.

செவ்வாய்க்கிரகவிசேஷம்:—செவ்வாய்க்கிரகத்தில் அளவிறந்த கால்வாய்கள் மிகுதிறமுடைய இன்ஜினீயர்களாலும் வேலைக்காரர்களாலும் வெட்டப்பட் டிருக்கின்றன வென்றும், அவை அநேக ஆயிரமைல் நீளமுடையனவென்றும், அமேரிக்காவிலுள்ள வானசாஸ்திரிகள் தீர்மானஞ்செய்திருக்கின்றார்கள். இக்கிரகத்தி லுள்ளவர்கட்கு இங்கிருந்து தந்திகொடுத்துப் பதில் பெறுமாறு யந்திரமொன்று மிக்கரிஸ் என்னும் வானசாஸ்திரியால் செய்யப்பட்டு வருகின்றது. இதற் கிதுகாறும் 20-இலட்சம் பவுண்டு செலவாயினவாம்; இராஜாங்கத்தாருதவிஇவ்வானசாஸ்திரிக்குப்பெரிதுமுண்டாம்.

டிடானிக் கப்பல்.

எப்ரல்மீ 14 ந் தேதி ஆதிவாரம் இரவு 11-20 மணிக்கு டிடானிக்கப்பல் பனிப்பாளத்தில்மோதியது' உடனே இவ்விஷயம் கவனிக்கப்படாமற் போயிற்று; ஆனால் பின்னர்ப் பிரயாணிகளையும் கப்பலையும்இரட்சிக்கமுயன்றார்கள். உடனே உயிர்காப்புப் பெல்ட்டுகள் போட்டுக்கொள்ளுமா றுத்தரவிடப்பட்டது. படகுகள் கடலிலிறக்கப்பட்டன. கப்பலின் அபாயநிலைமை கம்பியில்லாத்தந்தி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது; வெடிகளும் இடை இடையே விடப்பட்டன; கார்ப்பேத்தியா, கம்பியில்லாத் தந்திசமாச்சாரம் கேட்டுச் சோமவாரம் காலை 4-மணிக்கு வந்தது.

டிடானிக் கப்பலில் 2340 பிரயாணிகளிருந்தனர்; கார்ப்பேத்தியா, வால் ரட்சிக்கப்பட்டவர்கள் 210 முதல் வகுப்புப் பிராயாணிகள்; 125 இரண்டாவதுவகுப்பு பிரயாணிகள்;200 மூன்றாவதுவகுப்புப் பிரயாணிகள்; 4 ஆபீசர்கள்; 39 சிமென்; 96 ஸ்டேவர்ட்ஸ்; 71 பயர்மன்கள்; ஆக 745 பேர்கள். இக்கப்பலுடன் 1595 ஜனங்கள் மரணமடைந்தனரென்று கருதப்படுகின்றது.

உலகத்திலுள்ள கப்பல்களுள் இதுவே பெரியதாம். இதில் விலையுயர்ந்த வயிரங்களும், நகைகளும், பத்திரங்களும், பாண்டுகளும், 50-டன் ரப்பரும், அதற்கு மேற்பட்ட நிறையுள்ள தேயிலையு மிருந்தனவாம். இதனால் கோடிக் கணக்கான பவுண்டு நஷ்டமாமென்று சொல்லப்படுகின்றது.

இக்கப்பல் 882 அடி நீளமும், $92\frac{1}{2}$ அடி அகலமுமுள்ளது; 45000 டன் சாமான் ஏற்றக்கூடியது. இது பிரசித்திபெற்ற ஹார்லண்டு உல்ப் கம்பெனியாரால் 11,5000 பவுண்டிற்குச் செய்யப்பட்டது; இது 1,000 000 பவுண்டுக்கு இன்ஷியூர் செய்யப்பட் டிருக்கின்றது.

இதற்கு முன்னர் 1707 ம் வருடத்தில் சர்ஷவல் நடாத்திய போர்க் கப்பல் முழுகியதனால் 2000 பேரும், 1782 ம் வருடத்தில் ராயல் ஜியார்ஜ் கப்பல் முழுகியதனால் 900 பேரும், 1878 ம் வருடத்தில் பிரின்ஸ் ஆலிஸ் என்னும் கப்பல் முழுகியதனால் 650 பேரும் இறந்துபோயின ரென்று தெரிகின்றது.

டிடானிக்கப்பல் விபத்தினால் உயிர்ச்சேத மடைந்தவர்களுடைய குடும்பத்தாருக் குதவி.

இதற்காக மான்ஷன் ஹவுஸ் நிதியொன்று சேர்க்கப்பட்டு வருகின்றது. இந்நிதிக்கு ஸ்பியர்ஸ் பிரதர்ஸ் 1000 கினியும், ராத்ஸ்சைல்டு 500 கினியும், கடலோடிச்சங்கம் 2000 கினியும், மார்கன் கிரன் பெல்கம்பெனி 2000 பவுண்டும், மிஸ்டர் எட்வர்ட் கிரன்பெல் 1000 பவுண்டும், பேரிங் கம்பெனி 500 பவுண்டும் கொடுத்திருக்கின்றன.

ஜியார்ஜ் சக்ரவர்த்தியார் 500 கினியும், மேரி சக்ரவர்த்தினியார் 200 கினியும், குவீன் அலெக்சாண்டிரா 200பவுண்டும் கொடுத்திருக்கின்றனர்.

அலெக்சாண்டிரா ஆர்பனேஜ், அநாதையாயிருக்கும் 20 குழந்தைகளை ரக்ஷிக்கும். டெய்லி டெல்லிகிராப்பண்டுக்கு 1151 பவுண்டு சேர்த்திருக்கின்றது. டாரண்டோ முனிசிபாலிடியார் 5000 டாலர்கள் கொடுத்தல் வேண்டுமென்று ஒட்டுக்கொடுத் திருக்கின்றார்கள்.

உயிர் துறந்த புருஷர்களின் குடும்பங்களைக் காப்பாற்ற டெய்லிமெயில் பத்திரிகை ஆங்கிலேய ஸ்திரீகளுக்கு விண்ணப்பஞ் செய்திருக்கின்றது.

இப்பண்டிற்கு இதுகாறும் 40,000 பவுண்டு சேர்ந்திருக்கின்றன.

பிரசித்திபெற்ற "ரிவ்யூ ஆப் ரிவ்யூ" பத்திரிகையின் பத்திராதிபர் மிஸ்டர் ஸ்டீட் டிடானிக் கப்பல் விபத்திலிறந்து போயினர்.

கார்ப்பேத்தியாக் கப்பல் ஏப்ரல்மீ 19உ இரவு 8-37-ல் நியூயார்க் துறைமுகம் போய்ச்சேர்ந்தது. அப்போது நியூயார்க் ஸ்டாக் எக்ஸ்சேஞ் கம்பெனியார் 20090 டாலர் உயிர்தப்பியவர்கட் குபகாரமாகுமாறு கொண்டு போயினர்.

170-பக்கப் புத்தகம் இனும்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும்திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

☞ இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதிராஸ்.

ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.